பக்கங்கள் 8 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELANADU

மலர்: 19 வைகாசி 13 ஜ: ஆகிர்: 7 இதழ்: 104
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 26-5-77

பருத்தித்துறை

## ஐ. தே. க. அமைப்பாளர் தாக்கப்பட்டார்

நெல்லியடி, புதன்

பருத்தித்துறைத் தொகுதி ஐக்கியதேசியக்கட்சி அமைப்பாளர் திரு. கே. வி. சரவண பவானந்தம் ஒரு கோஷ்டியினரால் வழிமறித்துத் தாக்கப்பட்டார். தாக்குதலுக்குள்ளான திரு. சரவணபவானந்தம் பலத்த காயங்களுடன் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை திரு. சரவணபவானந்தம் தமது மகளை கல்லூரியில் சேர்ப்பிப்பதற்காக சைக்கிளில் மகளுடன் மந்திகையிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும்போது கிராமக்கோட்டடிச் சந்தியில் வைத்து ஒரு கோஷ்டியினரால் வழிமறித்துத் தாக்கப்பட்டதாகப் பொலிஸ் விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்குள்ளானவர் உடனடியாக மந்திகை அரசி

(8-ம் பக்கம் பார்க்க)

# துரையப்பா கொலை வழக்கு: எதிரிகள் அனைவரும் விடுதலை

## "கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டது சட்டவிரோதம்"

கொழும்பு, புதன்

**முன்னாள் யாழ். மேயர் அல்பிரட் தங்கராசா துரையப்பா கொலை வழக்குத் தொடர்பாக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுவையடுத்து எதிரிகள் அறுவரும் இன்று உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.**

### சட்ட விரோதம்

மேற்படி எதிரிகள் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டதுசட்ட விரோதமானது என்று நீதிபதிகள் தமது தீர்ப்பில் கூறியுள்ளனர்.

உயர் நீதிமன்ற நீதிபதிகள், தலைவர் திரு. விமலரத்ன, திரு. மல்கம் பெரேரா, திரு. சர்வானந்தா ஆகியோர் இத்தீர்ப்பை இன்று வழங்கினர்.

7 பேர்களுக்கு எதிராக 'ட்ரயல் அட் பார்' நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கை சட்டமா அதிபர் திரு சிவா பசுபதி வாபஸ் பெற்றுக் கொண்டதையடுத்து அந்த வழக்கில் இருந்து விடுதலைசெய்யப்பட்ட எதிரிகள் ஏழு பேரும் உடனேயே சி. ஐ. டி. பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு கொழும்பு பிரதம நீதவான் திரு. ஆர். பி. ரணராஜா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு இம்மாதம் 26ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டது தெரிந்ததே.

இதில் செல்வகுமார் என்பவர் விடுதலைசெய்யப்பட்டுவிட்டார்.

இவர்கள் றிமாண்டில் வைக்கப்பட்டதை ஆட்சேபித்து சட்டத்தரணி திரு. எஸ். சுமந்திரன் மேல் நீதிமன்றத்தில் மேற்படி ஆட்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

மேற்படி ஏழு பேரையும் கைதுசெய்தது சட்டவிரோதம் என்றும், றிமாண்டில் வைக்க நீதவானுக்கு அதிகாரம் இல்லையென்றும், றிமாண்டில் இருக்கும் அவர்களை விடுதலைசெய்ய வேண்டுமென்றும் அவர் தன் மனுவில் கேட்டிருந்தார்.

இந்த மனுவில் அவர் முதலாவது பிரதிவாதியாக சட்டமா அதிபரையும், இரண்டாவது பிரதிவாதியாக வெலிக்கடை

(8ம் பக்கம் பார்க்க)

## நியமனக்குழு முடிவில் மாற்றமில்லை

ஆனைக்கோட்டை, புதன்

தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர் நியமனக்குழு அறிவித்தபடி சகல தொகுதிகளிலும் நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடுவார்களென தமிழர் விடுதலைக்கூட்டணி நியமனக்குழு உறுப்பினர் சட்டத்தரணி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். "பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளின்படி எந்தவித மாற்றமும் நடைபெறமாட்டாது. நான்குழுமுடிவுக்கமைவாக கோப்பாயில் போட்டியிடுகின்றேன்."

## கிளிநொச்சியில் இன்று ஊர்வலம், சத்தியாக்கிரகம்

கிளிநொச்சி, புதன்

கிளிநொச்சிப் பகுதியில் வீடமைப்புக் காணிகள் வழங்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்து இளைஞர்கள் பலர் இன்று கிளிநொச்சியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றையும் சத்தியாக்கிரகத்தையும்மேற்கொள்ள இருக்கின்றனர்.

கிளிநொச்சி விவசாய சம்மேளனக் கிளைத் தலைவர் திரு. பா கணேசபிள்ளை தலைமையில் பரந்தனில் இருந்து இன்று காலை ஊர்வலம் ஆரம்பமாகி கிளிநொச்சிக் காணிக் கச்சேரியை சென்றடையும். அங்குள்ள அதிகாரியிடம் தமது ஆட்சேப மகஜரைச் சமர்ப்பித்த பின்னர் இந்த இளைஞர்கள் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்குச் சென்று உதவி அரசாங்க அதிபரிடமும் மகஜர் ஒன்றைச் சமர்ப்பிப்பர்.

அங்கிருந்து குறிப்பிட்ட வீடமைப்பு காணிகளுக்குச் செல்லும் இவர்கள் அங்கு நடைபெற்றுவரும் துப்புரவு செய்யும் வேலைகளை மேலும் தொடர விடாமல் சத்தியாக்கிரகம் இருக்க உள்ளனராம்.

கிளிநொச்சிப் பகுதியில் பல ஏழைமக்கள் வீடின்றி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் வெளியூர்களைச் சேர்ந்த வசதிபடைத்த சிலருக்கு கிளிநொச்சியில், வீடமைப்புக்காணி வழங்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக நடைபெற்ற காணிக் கச்சேரி முறையற்றதாகையால் உடன் அவற்றை ரத்துச் செய்யும்படி கோரியுமே இந்த ஊர்வலமும் சத்தியாக் கிரகமும் நடத்தப்படுவதாக திரு. கணேசபிள்ளை கூறினார். (இ)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, புதன்

இன்று அக்குறணையில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 616வது சீட்டிழுப்பில் பரிசுபெற்ற முதல் மூன்று டிக்கட்டுகளும் வருமாறு;

முதல் பரிசு
**35 ⌣ 0658**
**ஒரு லட்சம் ரூபா**

இரண்டாம் பரிசு
**70 U 0769**
**40,000 ரூபா**

மூன்றும் பரிசு
**22 ○ 0905**
**10,000 ரூபா**

## "எந்தத் தொகுதியிலும் நான் சுயேச்சையாக போட்டியிடேன்"

### ஆலாலசுந்தரம் அறிக்கை

யாழ்ப்பாணம், வியா.

"முல்லைத்தீவுத் தொகுதியில் நான் சுயேச்சையாகப் போட்டியிடுவேன் என்று பத்திரிகை ஒன்றில் (ஈழநாடு அல்ல) வெளிவந்த செய்தியில் எதுவித உண்மையுமில்லை. நான் எந்தத் தொகுதியிலாவது சுயேச்சையாகப் போட்டியிடுவேன் என்று கூறவில்லை."



என்று தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும் சட்டத்தரணியுமான திரு. மு. ஆலாலசுந்தரம் நேற்று விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

இவ்வறிக்கையில் அவர் மேலும் கூறிபிருப்பதாவது:

"தமிழரசுக் கட்சியின் ஆரம்பகாலத்தொண்டனாக இருந்து இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்களில் ஒருவனாகத் தொடர்ந்தும் தொண்டனாக கூட்டணியின் இலட்சியத்தை அடைவதற்காக உழைத்து வருகின்றேன். எந்தக் காரணத்தினாலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழரசுக் கட்சிக்கோ, தமிழர் விடுதலைக் கூட்டணிக்கோ இடையூறு விளைவிப்பதற்கு யார் முன்வந்தாலும் அதை முழு மூச்சாக முன்னில் எதிர்த்து நிற்பவன் நான் என்றே நான் கருதுகிறேன்.

### நான் சொல்லவில்லை

முல்லைத்தீவுத் தொகுதியில்

(8-ம் பக்கம் பார்க்க)

## மாஜி பொலிஸ் அதிகாரிக்கு பொலிஸாரால் அவமதிப்பு?

யாழ்ப்பாணம், வியா.

மாஜி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் பொலிஸ் நிலையம் ஒன்றின் முன்பாக வைத்து சில பொலிசாரால் அவமதிக்கப்பட்டாராம்.

அண்மையில் இளைப்பாறிய பிரஸ்தாப இன்ஸ்பெக்டர் குறிப்பிட்ட வடபகுதிபொலிஸ் நிலையம் ஒன்றிற்கு முன்பாக சென்று கொண்டிருந்தபோது பொலிசார் சிலர் அவரை நோக்கி கற்களும், சிரட்டைகளும், அழுகிய பழவகைகளும் வீசி அவரைக் கிண்டல் செய்ததாகக் கூறப்படுகிறது.

சில பொலிசார் எதிரிகளாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு ஒன்றினை இவர் முன்னின்று நீதிமன்றத்தில் நடத்தியதன் எதிரொலியாகவே இச்சம்பவம் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது.

இதுபற்றி அவர் அப்பகுதி உதவி அரசாங்க அதிபரிடம் முறையிட்டுள்ளார் எனத் தெரியவருகிறது. ]உ[

## வரி விளம்பரம்

### கல்வி

பட்டதாரி ஆசிரியர்கள் வீடுகள் சென்று ஆங்கில இலக்கணம், இலக்கியம், பொது அறிவு, ஆங்கிலப் பேச்சு (Spoken English) கற்றுக் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல 6212, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 6212

## விளம்பரம்

அளவெட்டி - மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்தில் சுமார் 5000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனையாக விருக்கின்றன. இதற்கான கேள்வி விண்ணப்பங்கள் யாவும் சங்கத்திலிருந்து பெறப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் பூர்த்தி செய்யப்பட்டு, முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 2 6–77 ந் திகதி வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்கு முன்னதாகச் சங்கக் காரியாலயத்தில் சேர்ப்பிக்கப்படவேண்டும். விண்ணப்பப் பத்திரத்திற்கான வைப்புப் பணம் ரூபா 500/–ஆகும்.

**க. கணபதிப்பிள்ளை,**
பொதுமுகாமையாளர்,
அள- மல்- ப. நோ. கூ சங்கம்.
6263

## சங்கானை பட்டினசபை 1977 ம் ஆண்டு

### 1 ம் காலத் தவணை மதிப்பீட்டு வரிகள் செலுத்தல்

மேற்படி பணம் செலுத்துவதற்கு வழங்கப்பட்ட சலுகைக் காலத் தவணை மேலும் கால நீடிப்புக் கொடுக்கப்பட்டுள்ளதென வரி செலுத்துவோருக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. எனவே 1977 ம் ஆண்டின் 1 ம் காலத் தவணைக்கான மதிப்பீட்டு வரிகள் யாவும் 1977 ம் ஆண்டு ஜூன் மாதம் 15 ம் திகதி பி. ப. 2-00 மணிக்கு முன்னர் அல்லது அதற்கு முன்னதாகவோ இக் காரியாலயத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

அதற்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன் 10 சதவீதம் வாராந்துச் செலவுப் பணமும் மேலதிகமாக அறவிடப்படும்.

**இ. தணிகாசலம்**
செயலாளர்
ப. ச., சங்கானை
பட்டினசபை அலுவலகம் -
சங்கானை
23-5-77 6275

## தேவை

முதல்தரமான மெசின்மைன்டர் (Machine Minder) தேவை. நேரில் வரவும். ஆர். எஸ். அச்சகம், 149, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7669. 6272

### CLASSES

ICMA, ACCA November 1977 Accountancy classes just commenced. Time Saturdays 2-5 p. m Sundays 8-12 a.m. at the Education Centre No. 22, Ramiah Chettiar Lane, Hospital Rd., Jaffna. 6211

## நல்லூர் கிராமசபை

### கேள்வி விளம்பர அறிவித்தல்

நல்லூர் கிராமசபை விசேட ஆணையாளர் அவர்களால் 1977–ம் ஆண்டு ஆனி மாதம் 9 ம் திகதி வியாழக்கிழமை காலை 10-00 மணிவரை கீழ் காட்டிய வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ ஏற்றுக்கொள்ளப்படும். ரூபா 50/- வைப்புப் பணமாகவும் ரூபா 10/- ரெண்டர் பத்திர பணமாகவும் கட்டியதன் பெயரிலே வழங்கப்படும். கேள்விப் பத்திரங்கள் நல்லூர் கிராம சபையில் 1977 ம் ஆண்டு ஆனி மாதம் 7 ம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 2 மணிவரை வழங்கப்படும். இது சம்பந்தமான மற்றைய விடயங்களை நல்லூர் கிராமசபை கந்தோரில் அறிந்துகொள்ளலாம். ரெண்டர் பத்திர பிரதிகளில் ஒன்று பிரதேச உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்படல்வேண்டும்.

(1) அரியாலை கிழக்கு சுடலை மடம் கட்டுதல்.
(2) முடமாவடி சாஸ்திரியார் வீதி அமைத்தல்.
(3) அரசடி அம்மன் வீதி சந்தி பள்ளம் நிரவுதல்.
(4) வாசிகசாலை வீதி பாலம் கட்டுதல்.

(ஒப்பம்)
**தி. நாகேஸ்வரன்**
விசேட ஆணையாளர்
நல்லூர்
கிராமாட்சி மன்றம்
நல்லூர் கிராமபிரதேச
அலுவலகம்
யாழ்ப்பாணம்
24-5-77 6276

## எஸ். எம். ஏ. டின் விநியோகம்

கொழும்பு, புதன்
கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் 30,000 எஸ். எம். ஏ, டின்களை விநியோகம் செய்துள்ளது!

## ஒரே மேடையில் இருவேட்பாளர்

யாழ்ப்பாணம், வியா
மீசாலையில் தமிழ்த்தலைவர்களுக்கு நடந்த அஞ்சலிக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி அபேட்சகர் திரு. வி. என். நவரத்தினமும் தமிழ்க் காங்கிரஸ் வாலிபமுன்னணி சார்பில் போட்டியிடும் திரு. வி. குமாரசாமியும் ஒரே மேடையில் தோன்றினார்கள்.

அமரர்களான எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஜி. ஜி. பொன்னம்பலம், எம். திருச்செல்வம் ஆகியோர் குறித்து மீசாலை புதுச்சந்தையில் அஞ்சலிக்கூட்டம் நடந்தது.

திரு. எம். ரி. சுப்பிரமணியம் தலைமையில் நடந்த இந்த அஞ்சலிக்கூட்டத்திற்கு திரு. வி. என். நவரத்தினமும் திரு. வி. குமாரசாமியும் வந்திருந்தனர். இருவரும் கூட்டத்தில் உரைநிகழ்த்தினார்கள். (க)

## 'வழக்குகளை வாபஸ் பெறுக'

யாழ்ப்பாணம், வியா
யாழ். லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் முன்னேற்றத்திற்கு தடையாக விருக்கும் கல்லூரியின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட வழக்குகள் வாபஸ். பெறப்படவேண்டுவதுடன் இவற்றிற்கு காரணமாக விருக்கும் கல்லூரி நிர்வாக அதிகாரியும் தமது பதவியில் இருந்து ராஜினுமாச் செய்ய வேண்டும் என்று கோரும் தீர்மானம் மேற்படி கல்லூரில் பெற்றோர் சங்ககூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன் சபா மண்டபத்தில் தலைவர் டாக்டர் எம். பொன்னையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நிர்வாகத்தினுல் தடைசெய்யப்பட்டுள்ள மாணவர்கள் மீண்டும் எந்தவித விசாரணையும் இன்றி கல்லூரி அனுமதிக்கப்படவேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

பெற்றோர் சங்க நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: டாக்டர் எம். பொன்னையா, செயலாளர்: டாக்டர் எஸ். சிறிவிக்கினேஸ்வரன், உபசெயலாளர்: டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர், பொருளாளர்: திரு. கே. அரசரெத்தினம்.

## வருடாந்த மகோற்சவம்

மட்டக்களப்பு, புதன்
கன்னன்குடா ஸ்ரீ கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த மகோற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 'கதவு திறத்தல்' சிறப்புப் பூசையுடன் ஆரம்பமானது. தொடர்ந்து ஒருவார காலம் விசேட ஆராதனைகள் நடைபெற்று 29ம் திகதி இரவு அம்மன் குளிர்த்தியுடன் உற்சவம் முடிவுறும்.

## இது உண்மையா?

யாழ்ப்பாணம், வியா
தேர்தலில் கட்டுப்பணத்தை இழப்பவர்கள் வேலையையும் இழப்பார்கள் என்றசெய்தி உண்மைதானு? என்னும் வினுவைத் தந்திமூலம் பொது நிருவாக உள்நாட்டு அமைச்சருக்கு தமிழ் சோஷலிசக் கட்சி அமைப்பாளர் வித்துவான் கா. வேலன் அனுப்பியுள்ளார்.

இச்செய்தி உண்மையானுல் அரசு ஊழியருக்கு அரசியல் உரிமை வழங்கப்பட்டிருப்பது ஏமாற்று வித்தை என்றும் தண்டனை வழங்குவதுதானு இன்றைய அரசு வழங்கும் அரசியல் உரிமை என்றும் அவர் தமது தந்தியில் குறிப்பிட்டுள்ளார். (கா)

## "நமது விடுதலை இயக்கத்தை குழப்புபவர்களை வெளியேற்ற வேண்டும்"

— காசி ஆனந்தன்

மட்டக்களப்பு, புதன்
"தந்தை செல்வாவினுல் கட்டி வளர்க்கப்பட்ட தூய்மையான விடுதலை இயக்கத்தை குழப்பி மாசுகற்பிப்பவர்களை விடுதலை இயக்கத்திலிருந்து வெளியேற்ற வேண்டும். இதற்காகவே உட்கட்சிப் போராட்டத்தில் சில கருத்துக்களை வைத்து போராட்டம் நடாத்தி வருகின்றேன். எனக்குக் கெட்டபெயர் கிடைத்தாலும் இயக்கத்திற்கு நல்ல பெயரையே பெற்றுக் கொடுப்பேன்"

இவ்வாறு மட்டக்களப்பு இரட்டைத் தொகுதி அபேட்சகர்களுள் ஒருவரான கவிஞர் காசி ஆனந்தன் பட்டிருப்புத் தொகுதியில் உள்ள களுவாஞ்சிக் குடியில் நடைபெற்ற தந்தை செல்வாவின் இரங்கற் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

"தூய்மை இல்லாத எந்த இயக்கமும் வெற்றி அடைந்தது கிடையாது. தந்தை செல்வாவினுல் 30 ஆண்டு காலமாக கட்டிக் காக்கப்பட்டு வந்துள்ள விடுதலை இயக்கத்தின் தூய்மை கெட்டுவிடாமல் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு தமிழனுடைய கடமையுமாகும். நான் நடாத்திவரும் உட்கட்சிப் போராட்டத்தில் நிச்சயம் வெற்றி பெறுவேன் என்றும் அவர் உறுதிப் படுத்தினுர்.

"வடக்கையும் கிழக்கையும் ஒன்றிணைத்து விட்ட தந்தை செல்வா ஏற்படுத்திய ஒற்றுமையைக் கடைப்பிடிப்போமென வாயளவில் கூறிக் கொண்டு வடக்கேயும் கிழக்கேயும் பிரிப்பவர்களை இன விடுதலை இயக்கத்தினுள் வைத்திருக்கக் கூடாது இதை நான் இதயத்தால் பேசுகிறேன். மற்றவர்கள் இதழ்களால் பேசுகின்றுர்கள்" என்றும் காசி ஆனந்தன் கூறினுர்.

## "ஐ தே.க. ஆட்சிக்குவந்தால் பழிவாங்கும்முறை இருக்காது!"

இரத்தினபுரி, புதன்
'ஐக்கியதேசியக் கட்சியை நாட்டின் சகல மக்களும் இன்று ஆதரிக்கின்றுர்கள். மக்களுக்கு நாம் நல்லதையே செய்வோம். மக்களின் பூரண ஆதரவுடன் வெற்றிபெறும் நாம், நாட்டில் புதியதொருஅத்தியாயத்தை எழுப்புவோம்' என்று தெட்டமுல்ல என்னுமிடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் முன்னுள் சமூக சேவைகள் அமைச்சர் திரு. அசோகா கருணுரத்ன பேசுகையில் கூறினுர்.

'ஐக்கியதேசியக் கட்சியுடன் இணைந்திருக்கும் நாட்டு மக்கள் ஒரு வலுவுள்ள ஐ. தே கட்சி அரசு ஆட்சிக்கு வருவதையே விரும்புகின்றுர்கள். இந்த நிலை வரவேண்டும். ஐ. தே. கட்சி ஆட்சிக்கு வந்தால் எவரையும் பழிவாங்கமாட்டோம். நியாயமான விலையில் எல்லா மக்களுக்கும் உணவு, உடை கிடைக்க நாம் ஏற்பாடுகள் செய்வோம். இழந்த எல்லா சுதந்திரங்களும் மீண்டும் வழங்கப்படும்' என்றும் அவர் கூறினுர்.

## விளம்பரம்

**பதவி வெற்றிடம் செயலாளர் பதவி தரம் 1**

மேற்குறிப்பிட்ட பதவி சம்பந்தமாக இலங்கைப்பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வசிப்பிடத் தகைமைகள்:-**
குறைந்தளவு இரண்டுவருடமாவது யாழ். மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல்வேண்டும்.

**வயது:**
23க்கும் - 50க்கும் இடைப்பட்டதாக் இருத்தல் வேண்டும். (8-6-77).

**வேதனம்:**
ரூபா 300/- -10X10/- 15X6/- ரூ. 490/-
அனுபவம் தகைமை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு குறிக்கப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டத்திற்கு மேற்படாமல் தகுந்த சம்பள அளவு நிர்ணயிக்கப்படும். (Selected candidate will be placed at a higher Salary point not exceeding the maximum in keeping with his Qualification & Experience)

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி; 8-06-77.

பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களை 8-06-77க்கு முன்னதாக கீழ்க்குறிக்கப்பட்ட விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

தேவையான தராதரங்கள், மற்றும் தகைமைகள் பற்றிய விளக்கங்கள் யாவும் பெறுவதற்காக கீழ்க்காணும் விலாசத்திற்குஎழுத்துமூலமோ அன்றேல்நேரடியாகவந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

தபால்மூலம் பெறவேண்டின் முத்திரை ஒட்டப்பட்ட சொந்த முகவரியிடப்பட்ட கடித உறை அனுப்பப்படல் வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளல்வேண்டும்.

**பதில் பொது முகாமையாளர்,**
உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்,
உடுப்பிட்டி,
வல்வெட்டித்துறை,
23-5-77. 6274

## விவசாயப் பாடசாலை

### மருதனுமடம், சுன்னுகம்

மேற்படி பாடசாலையில் இன்னும் சில மாணவர்களைச் சேர்ப்பதற்கான வெற்றிடங்கள் உண்டு. உடனடியாக நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும்.
6273 அதிபர்.

## மேல்நாட்டில் தொழிற்பயிற்சி, வேலைவாய்ப்பு

அமெரிக்காவில் மேலதிக வெல்டிங் பயிற்சி பெற்று அமெரிக்க வெல்டிங் அசோசியேசனில் ஒரு அங்கத்தவராகுங்கள். சொற்ப இடங்கள் மாத்திரமே. விபரங்களுக்கு உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**S. K. பொன்கலன்**
சட்டத்தரணி
'கிதாஸ் ரவல்ஸ்'
2/B புதுவீதி
அத்தியடி, யாழ்ப்பாணம்.
6279

### சர்க்காரியா விசாரணை அடிப்படையில்

# கருணாநிதி, மாஜி மந்திரிகள் மீது நடவடிக்கை!

## காங்கிரஸ்தேர்தல் விஞ்ஞாபனம் கூறுகிறது

சென்னை, மே. 25

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தால் முன்னாள் முதல்வர் திரு. மு. கருணாநிதிக்கும் அவரது சகஅமைச்சர்களுக்கும்எதிராகச் சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக சர்க்காரியா கமிஷன் விசாரணை அறிக்கையின் அடிப்படையில் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு காங்கிரஸ்கட்சி வெளியிட்டுள்ள தேர்தல்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

காங்கிரஸ் வெற்றிபெற்ருல் தமிழ்நாட்டில் தூய்மையும் திறமையுமுள்ள ஆட்சிஅமைக்கும்.

திருமதி இந்திராகாந்தியின் 20 அம்சத்திட்டம் தீவிரமாக அமுல் செய்யப்படவுள்ளது.

காங்கிரஸ் ஆட்சி ஜனநாயக சோஷலிஸ, மதச்சார்பின்மையை வலியுறுத்துமென்றும் அத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### தமிழ் நாட்டில்

# ஜனதாவா-அஇஅதிமுகவா ஆட்சி பீடம் ஏறும்?

## இதுவே இன்றைய பிரச்னை என்கிருர் சுப்பிரமணியசுவாமி

சென்னை, மே 25

அடுத்த மாதம் நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் ஒரு கௌரவப் பிரச்னை. ஜனதா கட்சிக்கும் எம். ஜி. ஆரின் கட்சிக்குமே முக்கிய போட்டி இருக்கும். இவற்றுள் எந்தக்கட்சிக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பதே மக்கள் முன்னுள்ள பொறுப்பாகும்.

இவ்வாறு ஜனதா கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. சுப்பிரமணியசுவாமி தெரிவித்தார்.

சென்னையில் நடைபெற்ற ஜனதா கட்சித்தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

**ஹிந்திமொழி திணிப்பில்லை**

தென்மாநில மக்கள் மீது ஹிந்திமொழியை ஜனதா அரசு என்றுமே திணிக்கமாட்டாது.

**சர்க்காரியா விசாரணை தொடரும்**

திரு. கருணாநிதிக்கும் அவரது சகஅமைச்சர்களுக்கும் எதிராக சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்துவரும் சர்க்காரிய கமிஷன்விசாரணை எக்காரணம் கொண்டும் நிறுத்தப்படமாட்டாது. பிரதமர் திரு மொரார்ஜி தேசாயும் இது பற்றி ஏற்கனவே உறுதி கூறியிருந்தார்.

ஜன்தாகட்சி தமிழ்நாட்டில் ஆட்சிஅமைத்ததும் வருடாந்தம் ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க கூடிய விதத்தில் 20 ஆயிரம் சிறு கைத் தொழில்கள் ஆரம்பிக்கப்படும். (இ)

## தமிழ் மொழியைக் காக்கும் ஒரே இயக்கம் தி.மு.க.வே'

**–கி ஆ. பெ. விஸ்வநாதம்**

சென்னை, மே 25

''தமிழை தமிழ் நாகரிகத்தைக் காக்கும் ஒரே இயக்கம் தி. மு. க. வே'' என முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் நிறற்படத்தைத் சென்னையில் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது!

''சீர்திருத்தஇயக்கத்தொண்டனைத் திகழ்ந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தீண்டாமை ஒழிப்பு – விதவைத் திருமணம் – முதலியவற்றுக்கு கவிதைகளாக உருக்கொடுத்தார். கவிஞர் பாரதிதாசனின் வாழ்க்கை ஒரு நிழற்படத் துறையைச் சேர்ந்த ஒருவரால் பாதிக்கப்பட்டது. நிழற்படத்துறையினர் பயங்கரமானவர்கள்.

''தி. மு. க.இல்லையென்ருல் பூம்புகார் திரும்பியிருக்குமா? கட்டப்பொம்மன் கோட்டை உருவாகியிருக்குமா? டில்லியில் வள்ளுவர் சிலை உருவாகி இருக்குமா? நீதிமன்ற மொழியாகத் தமிழ் மாறியிருக்குமா? சென்னை ராஜ்யம் தமிழ்நாடாக மாறி இருக்குமா? எனவேதான் நான் பாரதிதாசன் வழியில் தி. மு. க. வை ஆதரிக்கிறேன்'' என்றும் அவர் கூறினர். (கி–இ)

# ரஷ்யாவின்புதிய அதிபர் பிரஸ்னேவ்

## அதிகார பீடத்திலிருந்து முன்னாள் அதிபர் நீக்கம்

மாஸ்கோ, மே.25

சோவியத்யூனியனின் புதிய அதிபராக கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் திரு.பிரஸ்னேவ் தெரிவுசெய்யப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி அதிகார பீடத்திலிருந்து ரஷ்ய அதிபர் திரு. பொட்கொர்ணி நீக்கப்பட்டதை அடுத்தே அவரின் இடத்திற்கு திரு.பிரஸ்னேவ் தெரிவு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப் படுவதாக சோவியத் செய்திகள் தெரிவிக்கின்றன.

1965-ம்ஆண்டு ரஷ்யஜனதிபதியாகப் பதவியேற்ற 74 வயதான திரு.பொட்கொர்ணி நேற்று நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக் கூட்டத்தை அடுத்து சகல பொறுப்புக்களில் இருந்தும் விக்கப்பட்டார்.

**அரசியலமைப்பில் மாற்றம்**

சோவியத் யூனியனின் அரசியல் அமைப்பில் சில மாற்றம் செய்யப்பட இருக்கிறது என்றும் அறிவிக்கப் பட்டது.

இம்மாற்றத்திற்கமைய ஜனதிபதிக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படும் எனக் கருதப்படுகிறது. (இ)

## 45 பேர் கைது

கம்பளை, புதன்

புப்புரஸ்ஸ தோட்ட சுப்பிரிண்டன் ஆனந்த பண்டார கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

புசல்லாவை டெல்டா தோட்டத்தில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பாகவே இவர் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவருடன் கைதான மற்றும் 42 பேரும் இம் மாதம் 31-ம் திகதி வரை றிமாண்டில் இருப்பார்கள்.

## தமிழ்நாடு தேர்தல் அரங்கு

தமிழ்நாட்டில் 4தேசியக்கட்சிகளுக்கும் 2 மாநிலகட்சிகளுக்கும் வானெலியிலும் டெலிவிஷனிலும் தேர்தல் பிரசாரம் செய்ய 15 நிமிடங்கள் ஒதுக்கப்படும். டெலிவிஷனில் இக்கட்சிகளின் முக்கிய தலைவர்கள் தோன்றி பிரச்சாரம் செய்வார்கள்.

**தி மு கவுக்கு மே 30, ஜூன் 6**

திராவிடமுன்னேற்றக் கழகம் இம்மாதம் 30 திகதியும் அடுத்த மாதம் 6ம் திகதியும் வானெலியில் பிரச்சாரம் செய்யும்.

**அ இ அ தி மு க வுக்கு மே 31, ஜூன் 7**

எம் ஜி ஆர் கட்சி இம் மாதம் 31ம் திகதியும் அடுத்த மாதம் 7ம்திகதியும் பிரச்சாரம் செய்யும்.

**பிரதமர் பிரச்சாரம்**

தேர்தல் பிரச்சாரம்செய்யும் பொருட்டு பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அடுத்தமாதம் முதல்பகுதியில் தமிழ்நாட்டுக்கு மீண்டும் விஜயம் செய்கிருர்.

**கருணாநிதி வாக்குவேட்டை**

சென்னை அண்ணா நகர் தொகுதியில் போட்டியிடும் திரு. மு. கருணாநிதி வீடு வீடாக வாக்காளரைச் சந்தித்து வாக்குக் கேட்டுவருகிருர்.

திரு. கருணாநிதி செல்லும் பல இடங்கள் விழாக்கோலம் பூண்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

திரு. கருணாநிதி நாள் ஒன்றுக்கு பல்லாயிரம் வாக்காளர்களைச் சந்தித்துவருகிருர்.

(செ)

## காங்கிரசிலிருந்து ராஜினமா

சென்னை, மே. 25

தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் லீக்கின்தலைவரும் முன்னாள் எம். பி. யுமான திரு. ஆர். எஸ். ஆறுமுகம் காங்கிரஸ் கட்சியிலிருந்து ராஜினமாச் செய்து ஜனதாகட்சியில் சேர்ந்துள்ளார். (இ)

### இஸ்ரேலுக்கு அருகே

# பாலஸ்தீன ராஜ்யம் அமையவேண்டும்

## சவூதி அரேபியா, அமெரிக்கா கருத்து

வாஷிங்டன் மே 25

பாலஸ்தீன மக்களின் தனி ராஜ்யம் இஸ்ரேலின் பாதுகாப்புக்கு முரணாக அமையாமல் இஸ்ரேலுக்கு அருகே நிறுவப்படவேண்டும் என்று அமெரிக்காவும், சவூதிஅரேபியாவும் கருத்துத் தெரிவித்துள்ளன.

அமெரிக்க ஜனதிபதி திரு. ஜிம்மி கார்ட்டரும், சவூதி அரேபியாவும் பாலஸ்தீன ராஜ்யம் பற்றி நேற்று வாஷிங்டனில் பேச்சுநடத்தினர்கள்.

பாலஸ்தீன ராஜ்யத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் இருக்கவேண்டும் என்ற கருத்தை திரு. கார்ட்டர் இப் பேச்சுவார்த்தையின் போது வலியுறுத்தினர்.

பாலஸ்தீன நாடு குறித்து அமெரிக்கா முதல்தடவையாக வெளியிட்ட திடமான கருத்து இதுவே என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

**ஐ. நா. தீர்மானத்தை இஸ்ரேல் ஏற்றது**

இதேவேளையில், இஸ்ரேலினல் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல் துருப்புக்கள் வெளியேற்றப்படவேண்டுமென்ற ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையின் தீர்மானத்தை இஸ்ரேல் ஏற்றுக்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (இ)

## நால்வர்கைது

மட்டக்களப்பு, புதன்

குடியரசுதினத்தன்று அரசாங்கத்துக்கு எதிரான சுலோகங்களை எழுதியும் தமிழ் ஈழம் மலர்க' என்ற துண்டுப் பிரசுரங்களை பஸ்ஸில் ஒட்டியதற்காகவும் மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்தவர்களான வாசுதேவா, பரமதேவா, மோகனச்சந்திரன், யோகன் ஆகிய நான்கு இளைஞர்களும் ஞாயிற்றுக் கிழமை மட்டுநகர் பொலிசாரினல் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர், இவர்களில் பரமதேவா, வாசுதேவா ஆகிய இருவரும் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர் ஏனைய இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

......

## சு. க. வேட்பாளர் ராஜினமா

மட்டக்களப்பு, புதன்

பொத்துவில் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும், மேற்படி தொகுதி (இரட்டை) வேட்பாளருமான ந. தர்மலிங்கம் சுதந்திரக் கட்சியிலிருந்து ராஜினமா செய்துள்ளார் நியமனக் கடிதத்தை பிரதமருக்கு அவர் அனுப்பிவைத்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடுவதற்காகவே இவர் சுதந்திரக்கட்சியிலிருந்து ராஜினமாச்செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

......

## சுயாட்சிக் கழக வேட்பாளர்

யாழ்ப்பாணம், வியா

சாவகச்சேரி தொகுதிக்கு சட்டத்தரணி திரு, மயில்வாகனத்தை சுயாட்சிக்கழக வேட்பாளராக, நியமனம் செய்ய கட்சித்தலைமைப்பீடம் முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது. (செ)

......

## இன்று

யாழ்ப்பாணம், வியா

இன்றுகாலை, பண்டத்தரிப்பு சந்தைக்கு அருகாமையில், விடுதலைக்கூட்டணிக்கிளை அலுவலகத்திறப்புவிழாவும், மாலை அமரர் செல்வாவின் இரங்கல் கூட்டமும் நடைபெறும். இக்கூட்டத்தில் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களும், இளைஞர் பேரவையினரும், உரையாற்றுவார்கள், (செ)

## பெ. ஆ. சங்க கூட்டம்

குருநாகல், புதன்

குருநாகல் இந்துதமிழ் மகா மகாவித்தியாலயப் பெற்ருேர் ஆசிரியசங்கப் பொதுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை நடைபெறும். அதிபர் திரு. மு. இராமலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெறும். (இ)

### மணிவாக்கு

உருவமுள்ள பொருள் எதுவாயினும்அது, துண்டுகள் பலவற்றின் சேர்க்கையின் பயனாகவே இருக்கவேண்டும். அதை அசையப்பண்ணுவதற்கு அதன் பின்னேயுள்ள வேறொரு வஸ்து அவசியமேயாகும்.

— சுவாமி விவேகானந்தர்

ஈழநாடு
THE EELANADU

# தோட்டப்பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு

தோட்டத் தொழிலாளர்களின் பாதுகாப்புக்கு ஏற்ற ஒழுங்குகளை செய்துதரும்படி தோட்டத் துரைமார் தூதுகோஷ்டியொன்று பொலிஸ் மா அதிபரை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

தோட்ட முதலாளிமாரின் பிரதிநிதிகளான துரைமார்கள் இதுகாலவரையில் தொழிலாளர்களை வெறும் அடிமைகளாகவே நடத்திவந்திருப்பதும், உரிமைக்குரல் எழுப்பும் தொழிலாளர் இயக்கங்களை நசுக்குவதற்காக இவர்கள் பொலிஸ்உதவியை மாத்திரமின்றி ஏனைய பிற்போக்கு நடவடிக்கைகளிலும் இறங்குவதில் பின்நின்றதில்லையென்பதும் பழைய கதை.

ஆண்டான்- அடிமை என்ற நிலை மாறி எல்லாருமே ஒரு தொழிலைச் சார்ந்தவர்கள் என்ற மனப்பான்மை உருவாகி வருவதையே தொழிலாளர்களுக்காக தோட்டத்துரைமார் 'வக்காலத்'து வாங்குவதான இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது. அதைவிட தோட்டப்பகுதிகளில் வெளியாரின் தலையீடும், சண்டித்தனமும், வன்செயல்களும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகரித்திருப்பதையும் இது சுட்டிக்காட்டுகின்றது.

தோட்டத் துரைமார் தூதுகோஷ்டியொன்று பொலிஸ் மாஅதிபரைச் சந்தித்து வலியுறுத்தியிருப்பதான செய்தி வெளியான அதேசமயம் புசல்லாவைப் பகுதி தோட்டம் ஒன்றில் இடம்பெற்ற தீ வைப்புச் சம்பவம் தொடர்பாக புப்புரஸ்ஸ பகுதி தோட்டத்துரை ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கின்ற செய்தியும் வெளியாகியுள்ளது.

நிலைமையை சற்று உன்னிப்பாகக் கவனிக்கும் போது தோட்டப்பகுதி மக்கள் கடந்த சில தினங்களாக எதிர்நோக்கியிருக்கும் நிலைமைக்கு அரசியல் பின்னணியே முக்கிய காரணம் என்று கருத இடமுண்டு.

பொலிஸ்மா அதிபரை தோட்டத் துரைமார் பேட்டி காண்பதற்கு முன் வந்ததிலும் கூட அரசியல் நோக்கம் இருப்பதாகக் கருதமுடியும்.

பொதுத்தேர்தல் அண்மித்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் ஏட்டிக்குப் போட்டியான நடவடிக்கைகள் உருவாவது சகஜமே. ஆனால் இதற்கு தோட்டப் பகுதியில் வாழும் பாமர ஏழைத் தொழிலாளர்கள் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப் படமுடியாது. நடந்து போன கொலை, கொள்ளை, தீவைப்பு, தாக்குதல் சம்பவங்கள் குறித்து பாரபட்சமற்ற முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகள் எப்படிப்பட்டவர்களாய் இருந்தபோதிலும் தகுந்த தண்டனைகளுக்குள்ளாக்கப்பட வேண்டும்.

தேர்தல்காலமாகையால், தொழிலாளர்கள் வெளியாரின் அச்சுறுத்தலுக்குள்ளாகாதவகையில் தமது வாக்குச்சீட்டுக்களை பயமின்றியும் சுதந்திரமாகவும் பயன்படுத்த வசதியளிக்க வேண்டும். இதற்கு தோட்டப்பகுதியில் தகுந்த பாதுகாப்பு அவசியம். ஆனால், வேலியே பயிரை மேய்ந்த கதையாக மீண்டும் நிலைமைகள் மோசமாகாதவகையில் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

பொலிஸ் மா அதிபர் தூதுக்குழுவிடம் உறுதியளித்தபடி தோட்டப்பகுதி மக்களுக்கு திருப்திகரமான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வார் என்று எதிர் பார்ப்போம்.

# அமைச்சரின் நகைச்சுவை

மீரிகமத் தொகுதியில் 'வயோதிபர் இல்ல'க் கலை நிகழ்ச்சியொன்றில் சமூகசேவைகள் அமைச்சர் திரு. எஸ். எஸ். குலதிலகா மிக நகைச்சுவையாகப்பேசியிருக்கிறார்.

''எனக்கு 70 வயதாகின்றது. அரசியலிலிருந்துஓய்வு பெறப்போகிறேன். இந்த வயோதிபர் இல்லத்தில் எனக்கும் ஓர் இடம் ஒதுக்கித் தந்தால், உங்களுடன் 'குஷியாக' காலத்தைஓட்டலாம்'' இவ்வாறு அமைச்சர் ஏக்கத்துடன் பேசியிருக்கிறார்.

அரசியலில் மாட்டிக் கொண்டவர்கள் அதிலிருந்து விடுபடுவதென்பது பெருங்காரியம். மக்கள் செல்வாக்குள்ள எந்தத்தலைவரும்அரசியலிலிருந்துஓய்வு பெற விரும்பமாட்டார்கள். என்னதான் புகழும் செல்வாக்கும் இருந்தாலும் அரசியல்வாதிகளுக்கு மன அமைதி கிடைப்பது கடினம். இதை எண்ணித்தான் போலும் அமைச்சர் முதியவர்களுடன் 'குஷியாக' பொழுதுபோக்க விரும்புகிறார்.

அமைச்சரின் நகைச்சுவை அத்துடன்முடிந்துவிட்டது. உண்மையில் அவர் ஓய்வு பெறப்போகிறாரா என்பது இனித்தான் தெரியும்.

அப்படி வயதுவந்தவர்கள் எல்லாம் அரசியலிலிருந்து ஓய்வுபெறுவதானால் நமது அரசியல் வானமே வெறிச் சோடிப்போய்விடும்.

ஏனென்றால் ஓய்வுபெற வேண்டிய வயதை எட்டி விட்ட அனேகர் நமது அரசியல் வானில் ஜொலித்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா!

# மூதறிஞர் மறைந்து இன்று 31-வது நாள்

**சூ. யோ. பற்றிமாகரன்**

''இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின் இரங்கி ஏங்க'' ஈழம்வாழ் தமிழினம் தங்கள் தன்னிகரற்ற தலைவனின் பூதவுடலைச் சுற்றிக் கதறியவண்ணம் பதறி நடந்து வந்த காட்சி இன்றுஏன்அகக் கண்முன் விரிகின்றது அந்த அன்புத் தலைவன்- அரசியல் மாமேதை- மறைந்து இன்றுடன் ஒருதிங்கள் ஓடிமறைகின்றது. முப்பதொருநாள் முடிந்துவிட்டபோதிலும் தந்தை செல்வாவினால் மூட்டப்பட்ட விடுதலைத்தீ தமிழ் மண்ணில் கொளுந்துவிட்டெரிகிறது. குறிப்பாக இன்றைய இளைய சமுதாயத்தை விடுதலைகாணத் துடிக்கும் ஒரு சமுதாயமாக மாற்றி வைத்த பெருமை தந்தையவர்களுடையதே. அவ் விடுதலைத் தீயை அவர் எவ்விதம் மூட்டினார்.

### சிதறிய தீப்பொறி

1948 ம் ஆண்டு இலங்கை குடியரசுச்சட்டம்- இந்திய பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டங்கள் கொண்டு வரப்பட்ட வேளையில் இதயமற்ற இனத்துடிப்பற்ற தமிழ்த் தலைவர்கள்கூட அதனை ஆதரித்த வேளையில் அதனை எதிர்த்து ஒரு அரசியல் சக்தியையே உருவாக்கினார் தந்தை செல்வா. ஊனை உரமாக்கி, மண்ணைப் பொன்னாக்கிய மக்கள்இந்நாட்டின் குடிகள்என்ற குலபெருமையை இழந்தவேளையில் மனிதாபிமானத்துடன்- இனத்துடிப்புடன்- அரசியல் தீர்க்கதரிசனத்துடன் அதனை எதிர்த்து காங்கிரஸ் என்னும் தீபத்தில் இருந்து சிதறிய தீப்பொறியாக மாறினார் தந்தை செல்வா. அந்தத் தீப்பொறிதான் 1949ம் ஆண்டு மார்கழி மாதம் மருதானையிலுள்ள அரசாங்க இலிகிதர் சங்கப் பணிமனையில் 'தமிழரசுக்கட்சி எனும் எரிதழலாக- அரசியல் கட்சியாகமாறியது.

### உடன்பிறப்பாக நேசித்தார்

தந்தை செல்வா மலையகம் வாழ் மக்களை தனது உடன்பிறப்பாகவே அன்றும் என்றும் கருதினார். இதன் எடுத்துக்காட்டாக பல ஏழை இந்திய தொழிலாளிகள் தந்தையின் பூதவுடலருகில் மயங்கிச் சாய்ந்த காட்சியை எனது கண்கள் கண்டன. பாகிஸ்தானிய சட்டத்தால் முஸ்லிம் சகோதரர்கள் சிலர்கூட பாதிக்கப்பட்ட வேளையில் அவர்களுக்காகவும் அவர் வாதாடத் தவறவில்லை. டாக்டர் கலீல் அவர்கள் தந்தையின் இறுதி யாத்திரையில் இரங்கலுரை நிகழ்த்துகையில் இலங்கையில் பிறக்காதவர்களுக்குக் குடியகல்வு சான்றிதழ் வழங்க மறுத்தபோது அத் தொழிலாளர்க்காக- மலேஷியாவில் பிறந்த தந்தை செல்வா தம்மை நாடற்றவராக்கி குடியகல்வுச் சான்றிதழுக்கு விண்ணப்பித்து தாம் அதனைப் பெற்றதன்மூலம் தம்மைப்போல் ஈழமண்ணில் பிறக்காத ஈழத்தின் குடிகளெல்லாம் அதனை பெறவழி செய்த சம்பவத்தைக் குறிப்பிட்டார். ஆம்,பிறர்க்குவரும் தீமையை தன்னுடையதாக கருதியவர் செல்வா அவர்கள் ''உன்னைப்போல் உன்பிறரை நேசி'' என்ற கிறீஸ்து பெருமானின் பொன் வாக்கைத் தம்வாழ்வாக மாற்றியவர் கிறீஸ்தவன் செல்வா. தமிழினம் முழுவதையும் அவர் ஒரு இனமாக பிரதேச உணர்வின்றி சாதிசமயங்களுக்கு அப்பால் கருதியமையால்தான் அவரவது மறைவுக்கு இந்தியாவிலும், இலண்டனிலும், கனடாவிலும் ஏன் எங்கெல்லாம் தமிழர் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அனுஷ்டித்தனர்.

### இரண்டு கால கட்டம்

இன்றை ஈழத்தமிழினத்தின் வரலாறு தனிஒரு மனிதனை தந்தை செல்வாவைச் சுற்றியே எழுப்பப்பட்டுள்ளது. அவரது அரசியல் பணியை இருபெரும் பிரிவுகளாக வகுக்கலாம். சமஷ்டிக் கோரிக்கைமீது 1973ம் ஆண்டு செப்டெம்பர் 7ம் திகதி வரை தமிழரசுக்கட்சியை நடாத்தியது ஒரு கட்டம். இரண்டாவது கட்டம் தனிநாடு என்னும் மாற்றமுடியாக் கொள்கையாக விடுதலைத்தீயை மூட்டிஎழுப்பியது நாமும்சகோதரர்களாகசமத்துவத்துடன் வாழ்வோம் என்னும் நோக்கில் அவர் வாழ்ந்த காலத்தில் பலவிதமான சோதனைகளை - போராட்டங்களை அவர் எதிர்நோக்கவேண்டி நேர்ந்தது.

### மொழிப்போராட்ட ஆரம்பம்

களனியில் சிங்களம்மட்டும் கொள்கையை பிரகடனப்படுத்திய ஐக்கியதேசியக்கட்சியினை எதிர்த்து சேர்.ஜோன் கொத்தலாவலைக்கு யாழ்.நகர் வந்த போது மாநகரசபை முன்றலில் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் செய்ததுடன் அன்னாரின் மொழிப்போராட்டம் ஆரம்பமாகியது. இதனைஅடுத்து 1956ம் ஆண்டு அலைமுழங்கும் காலிபேஸ் கடலருகே நிலைபுரளா மனத்திடத்துடன் சத்தியாக்கிரகம் நடாத்தியவர் தந்தை செல்வா. 57ம் ஆண்டில் சிங்கள ஸ்ரீயை எதிர்த்து மீன்பாடும் தேன்நாட்டின் சிறைக்குயிலாக மாறியவர் அவர். அதே ஆண்டில் சுதந்திரத்தை எதிர்த்து துக்கதினம் அனுஷ்டித்தார். திருமலை நடராசா போன்ற வீரத் தியாகிகள் தங்கள் உயிரால் தந்தையின் அறப்போராட்டத்திற்கு தர்மவியூகம் அமைத்துக் கொடுத்தனர். வடக்கிலேஅவருக்கு அரசியல் போட்டி இருந்தபோதிலும் கிழக்கிலே தன்னிகரில்லாத் தலைவனாக கிழக்கின் தமிழுணர்வின் சிற்பியாக வித்தாக அவர் திகழ்ந்தார் திரு வ. நடராசா, சந்திரன், மார்க்கண்டு என அவரின் இயக்கத்தை இரத்தத்தால் தசையால் உயிரால்கட்டிஎழுப்பிய எத்தனையோ தொண்டர்களை கிழக்கில் அவர்கொண்டிருந்தார். இவ்வாறாக பிரதேச உணர்வை ஒழித்து வடக்கு கிழக்கு மலையகத்தின் முடிசூடா மன்னனாக மாறிய முதல் தமிழ்மகன் தந்தைசெல்வா.

1960-ம் ஆண்டு இலங்கை அரசை முடமாக்கிய சாத்வீகப்போரின் தலைமைத் தளபதி பாய், பாரதப்போரின் கண்ணனைப்போல் தந்தை செல்வா திகழ்ந்தார். வெஞ்சிறைகண்டார். வேதனையுற்றார். உடலையே அழித்தார். செல்வத்தைக் கரைத்தார். தமிழ்

(5-ம் பக்கம் பார்க்க)

### ஆசிரியருக்குக் கடிதம்:

# சிறுபான்மைத் தமிழர் ஐயுறவு நீக்கப்பட்டது

ஈழம்வாழ் சிறுபான்மைத் தமிழ்மக்கள் அரசியல் ரீதியாகத் தமது அந்தஸ்தை ஸ்திரப்படுத்திக் கொள்ள முடியாத நிலைமையில் ஒரு நியமன உறுப்பினரை எமக்களித்து எம்மைக் கௌரவித்தது ஆட்சியில் இருந்த அரசு. ஆனால் தமிழ்மக்களால் இன்னும்நாம் அவர்களின் சகோதரர்களென்று அங்கீகரிக்கப்படவில்லையோவென ஐயுறவோடு வாழ்ந்து கொண்டிருக்கும் எம் சமூகத்தவர்களின் சந்தேகத்தைப் போக்கி ஐக்கியப்படுத்தும் நோக்கமாக எதிர்வரும் பொதுத்தேர்தலில் எம்சமூகத்தைச் சேர்ந்த திரு. த. இராஜலிங்கம் அவர்களைத் தமிழர் விடுதலைக் கூட்டு முன்னணியினர் உடுப்பிட்டித் தொகுதியின் வேட்பாளராக நிறுத்தியுள்ளமைக்காக எமது சமூகத்தின் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கூட்டு முன்னணியினர் தொகுதி நிர்ணய விசாரணைக் குழுவினருக்கு அளித்த வாக்குறுதிக்கிணங்க எங்கள் சமூகத்திலிருந்து ஒருவரை உடுப்பிட்டித் தொகுதியின் வேட்பாளராகத் தெரிவு செய்துள்ள அதேவேளையில் எம்மத்தியிலிருந்து அறிவும், ஆற்றலும் செயல்திறனும் மிகுந்த ஒரு வேட்பாளரைத் தேர்வு செய்துள்ளமையை எங்கள் சமூகத்தின் சார்பில் பாராட்டுகிறேன்.

உடுப்பிட்டித் தொகுதி முன்னாள் தேசியப்பேரவை உறுப்பினர்கள் திரு. கே. ஜெயக்கொடி, திரு. எம். சிவசிதம்பரம், ஆகிய இருவரும் திரு. இராஜலிங்கம் அவர்களை உடுப்பிட்டியின் வேட்பாளராக நிறுத்துவதில் பெரும் பங்கெடுத்துக் கொண்டுள்ள பெரும் தன்மையைப் போற்றி அவர்களுக்கு எம்சமூகத்தின் கடப்பாடும், நன்றியும், பாராட்டும் உரித்தாகுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சிறுபான்மைத் தமிழருக்கு எதிராகத் தமது வேட்பாளரை நிறுத்தப்போவதில்லையென்று தெரிவித்திருக்கும் தமிழர் சுயாட்சிக்கழகத் தலைவர் திரு. வி. நவரத்தினம் அவர்களுக்கு எம்சமூகத்தின் நன்றி என்றென்றும் உண்டு. அன்னாரின் பெருந்தன்மையைப் பின்பற்றி திரு. த. இராஜலிங்கம் அவர்களைப் போட்டியின்றி உடுப்பிட்டித் தொகுதியின் உறுப்பினராகத் தெரிவுசெய்து அனுப்பி வைப்பதுதான் தமிழினத்திற்குப் பெருமைதரும் திரு. இராசலிங்கம் அவர்களோடு எவராவது போட்டியிடுவது தமிழினத்திற்கு இழிக்குடைய செயலாகும். தமுழினம் பிளவின்றி ஒன்றுபட்டு தனது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் போராட்டத்தில் ஒருதடைக் கல்லாகவும் அவமானமாகவும் அது அமையலாம். அவ்வாறான ஒரு துர்ச்சகுனமாக எதிர்வரும் பொதுத்தேர்தலை உருவாக்காமல் தமிழ்மக்களின்வாழ்வில் விடிவுதோன்ற வழி சமைக்கும்வண்ணம் ஈழத்தமிழர்களை அன்போடு வேண்டுகின்றேன்.

க. நடேசன்
(ஆசிரியர்)

செயலாளர் அ. இ. சி.பா. த. மகாசபை

வட்டக்கச்சிக் கிளை

# வேண்டாம் விதண்டாவாதம்

## வல்வை ஏரம்ப மூர்த்திக்குப் பதில்

கடந்த 19-05-77ம் திகதி விவாதமேடையில் இலங்கையில் 'தமிழ்ஈழம்' சாத்தியமா என்ற நண்பர் திரு.மு.ஏரம்பமூர்த்தியின் கருத்தினைக் கண்டேன். தமிழ் மகன் ஒருவரின் சிந்தனை தவருன பாதையில் செல்லுகின்றதே என நான் வருத்தமடைகிறேன். அவரது சிந்தனைத் தவறினை நானும் ஒரு தமிழ்மகன் என்ற முறையில் ஓரளவிற்காவது சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

நண்பர் தமது சந்தேகத்தினை எழுதத் தொடங்கிய ஆரம்பத்திலேயே தவறிவிட்டார். 'தமிழ்ஈழம்' அமைபபது என் பதல்லஎமது இலட்சியம் எமது சொந்த நாடான 'தமிழ்ஈழத்தினை' சிங்களச் சிறிலங்காவிடமிருந்து மீட்பதுதான் எமது இலட்சியம் என்பதை நண்பருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்ததாக நண்பர் புள்ளி விபரங்களுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருக்கும் தமிழர்களையும், வெளிமாவட்டங்களிலிருக்கும்தமிழர்களதும் எண்ணிக்கையினைகுறிப்பிட்டுவிட்டு தமிழ்ஈழம் மீட்கப்பட்டபின் வெளி மாவட்டங்களிலிருக்கும் தமிழர்களது நிலைஎளனஎன்று கேள்வி எழுப்பியிருந்தார். இது ஒருசாதாரணவிடயம். இரண்டு நாடுகள் பிரியும்போது இரு நாட்டுமக்களும் அவர்கள் மனவிருப்பத்திற்கேற்ப ஒப்பந்த அடிப்படையில் பரிமாற்றப்படுவது சர்வதேச ரீதியில் நடைபெற்றுவரும் ஒரு செயலாகும். சில ஆண்டுகளுக்கு முன்னர் பங்களாதேஷும் பாகிஸ்தானும் பிரிந்தபோது பாகிஸ்தானிலிருந்து வங்காளிகள் பங்களா தேசத்திற்கும் பங்களா தேசத்திலிருந்து முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கும் பரிமாற்றப்பட்ட நிகழ்ச்சியைக்கூட நண்பர் அறியவில்லையா? இது

### விவாத மேடை

போன்ற ஓர் ஒப்பந்த அடிப்படையில் தமிழ்ஈழத்தில்வசிக்க விரும்பும் மக்கள் சிங்கள சிறிலங்காவிலிருந்து தமிழ்ஈழத்திற்கும் 'தமிழ்ஈழத்திலிருக்கும் சிங்கள மக்கள் சிங்கள சிறிலங்காவிற்கும் ஒப்பந்தஅடிப்படையில் பரிமாறப்படலாம். அத்தோடு தமிழ்ஈழம் மீட்கப்படுவதென்பது நண்பர் குறிப்பிட்டதுபோல் சலுகைகளை அனுபவிப்பதற்காகஅல்ல. எமது தமிழ்இனம் நிலைகுலைந்து போகாமல் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமாயின் தமிழ்ஈழத்தினைத் தவிர வேறுவழியேதும் இல்லையென்பதையும் நண்பர் உணரவேண்டும்.

சிங்கள மக்களது அர்த்தமற்ற பயங்களை எடுத்துக்கூறி வாதிடமுற்படும் நண்பர் தமிழினத்துக்கு அடுக்கடுக்காக இழைக்கப்படும் இன்னல்களை மறந்து விட்டாரா? நண்பர் குறிப்பிட்டதுபோன்ற பயம் சிங்கள மக்களுக்கு இருந்தால் அவர்கள் மேலும்மேலும் தமிழ் இனத்துக்கு தொல்லைதந்து கொண்டிருப்பார்களா?

நண்பரே தலைவர்களது பழைய ஒப்பந்தங்களையும் பழைய சம்பவங்களையும் மறந்துவிடுங்கள். ஏன் தலைவர்களை சற்று தவிர்த்துக் கொள்ளுங்கள். இன்று நாட்டில் நடக்கும் சம்பவங்களைச் சற்று நோக்குங்கள்.

0 தமிழன் உரிமையற்றநிலையில், உழைத்து ஓடாகிவிட்ட நிலையில் நாடுகடத்தப்படுகின்ருன்.

0 தமிழ்ப்பகுதிகளில்பொருளாதார அபிவிருத்தித்திட்டங்கள் ஏதும்செய்யப்படுவதில்லை.

0 தமிழ் மக்களுக்கு வேலைவாய்ப்பில் பாகுபாடு.

0 தமிழ் மக்களுக்குப்பதவி ர்வு என்றபோர்வையில்சிங்களத் திணிப்பு.

0 தமிழ் மக்களின் மதங்களுக்கு அரசியலமைப்பில் உரிய இடமில்லை.

0 தமிழ்மக்கள் தமிழாராய்ச்சி மாநாட்டிலும், புத்தளம் பள்ளிவாசலிலும், செம்மணியிலும், டெவன் தோட்டத்திலும், அநியாயமாகக்கொல்லப்பட்டனர்.

0 தமிழ்மக்கள் வாக்குரிமை பறிக்கப்பட்டுக் காடுகளில் கொண்டுபோய்விடப்படுகின்றனர்.

0 தமிழ்மக்களின் நிலங்கள் பறித்தெடுக்கப்படுகின்றன.

0 தமிழ்மக்களின் பாரம்பரியப் பிராதசங்கள் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் அழிக்கப்படுகின்றன.

0 தமிழ் இளைஞர்கள்சிறையில் வாடினர்.

0 தமிழ்மக்களின் கலை, கலாச்சாரம்,மொழி அழிக்கப்படுகின்றது.

0 தமிழ் இனம் அடிமையிலும் கேவலமாக நடத்தப்படுகின்றது.

நண்பரே, தங்கள் மனச்சாட்சியைக் கேட்டுப்பாருங்கள் மேற்கூறிய கொடுஞ்செயல்களெல்லாம் இன்று தமிழ்இனத்துக்குஇழைக்கப்படுகின்றனவா இல்லையா என்பதை அதுபதில் சொல்லும். எமக்கு இழைக்கப்பட்ட இன்னல்களின்காரணகர்த்தாக்களே ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், அதனைச்சார்ந்த கட்சிகளும்தானே. ஒருவனை அடிமையாக்கி அவனைச் சுரண்டி அவனது உழைப்பையும் தனக்கேயாக்கிக்கொள்ளும் முதலாளி தன்னால் அடிமையாக்கப்பட்டவனுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கவிரும்புவாஞ? சற்றுச் சிந்தியும் நண்பரே.

திரும்பும் திசையெல்லாம் சிங்கள அரசினால் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு இன்னல்களை அனுபவிக்கும் இந்நிலையில் எமது தாய்நாடான தமிழ் ஈழத்தினை மீட்பதற்குப்போராடுவதைத் தவிர வேறுவழியில்லை என்பதைநண்பர் அறிய வேண்டும். இன்றைய தமிழ் இளைஞர்கள் நண்பர் குறிப்பிட்டதுபோன்று வெறும் வாய்க்கோஷங்களுடன் மாத்திரம் நின்றுவிடவில்லை. தமிழ் ஈழ விடுதலைப்போராட்டத்திற்காக எத்தனையோ இளைஞர்கள் சிறையில் வாடியதையும் இப்போராட்டத்தினை உலகறியச் செய்வதற்காக வெளிநாடுகளில் எமது தமிழ் இளைஞர்கள் செய்த ஆர்ப்பாட்டங்களையும் அதன்மூலம் சர்வதேச ஸ்தாபனங்களிடமிருந்து கிடைத்த தார்மீக ஆதரவுகளையும்பற்றி நண்பர் அறியவில்லையா? அல்லது அறிந்தும் மூடிமறைக்க முயல்கிருரா?

எனவே நண்பர் இனியாவது தமிழ்ஈழம் சாத்தியமா என்ற தவருன சிந்தனையை விட்டுவிட்டு தமிழ்ஈழத்தினை எப்படி மீட்பது?அந்தப் புனிதப்பணிக்கு ஒவ்வொரு தமிழ் மகனும் செய்யவேண்டியது என்ன? சரியான சிந்தனைகளில் ஈடுபட்டு இனவிடுதலைக்கு உழைக்கும் புனிதப்பணியில் கலந்துகொள்ளுமாறு அன்புடனும் தாழ்மையுடனும் வேண்டிக்கொள்கின்றேன்.

### 2ம் பகுதி

நண்பர் ஏரம்பமூர்த்தியின் தவருன சிந்தனையின்விளைவாக உருவாகிய கருத்தின் இரண்டாம் பகுதியையும் பார்க்கும் வாய்ப்புக்கிட்டியது. நான் அதைப்படித்ததும் மிக மன வருத்தம் அடைந்தேன், விதண்டாவாதங்களிலும், வீண் சந்தேகங்களிலும் தனது பயன்படத்தக்க நேரத்தையும், எழுத்தையும் நண்பர் வீணடிப்பது கண்டு கவலைப்படுகின்றேன்.

### சாத்வீகமே வழி

தமிழ்த்தலைவர்களது வழியின்படி தமிழ் ஈழத்தைமீட்பதற்கு வழி ஆயுதப்போராட்டமல்ல; சாத்வீகவழிதான்.சாத்வீகவழிமூலம் எமது நாட்டை மீட்கலாமா என்று நண்பர் சந்தேகம் எழுப்பலாம். எமது அண்டைநாடான இந்தியாவின் அடிமைநிலை எப்படி நீங்கியது என்பதை நண்பர் அறியாமலிருக்கமாட்டார்.

அடுத்தது எமது உணவுற்பத்தியைப் பற்றியது. இன்று இலங்கையில் உற்பத்தியாகும் மொத்தநெல்லில் மூன்றில் ஒரு பங்கு எமது தமிழ் ஈழத்தில் உற்பத்தியாகிறது. இதில் மூன்றிலொருபகுதியே எமது தேவைக்குப் பயன்படுகிறது. எமது உற்பத்திப் பொருட்களை வைத்துக் கொண்டு நாம் தனிக்க வேண்டியதில்லை. எமது நாடு விடுதலை பெற்றவுடன் நாம் சிங்கள ஸ்ரீலங்காவிற்கே நாம் சில உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்யலாம். உதாரணமாக பிரிவடைந்த நாடுகளான பங்களாதேஷிலிருந்து பாகிஸ்தானுக்குச் சணலும்,பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷிற்குக் கோதுமையும் ஏற்றுமதி ஆதரவில்லையா? அது மாத்திரமன்றி சர்வதேசரீதியாக எமது கடலட்டை, கருவாடு, எள்,புகையிலை, பழரசங்கள் போன்றவற்றுக்குள்ள உயர்ந்தகிராக்கி நண்பர் அறியாததா? இது போன்ற விஷயங்களையெல்லாம் புரியாமல் நண்பர் ஏன் தான் மண்டையைக் குழப்புகின்ருரோ தெரியாது.

நண்பர் தனது கருத்தில் குறிப்பிட்டதுபோல் எமதுஇனமக்கள் வீடுவாசல்களைக்கட்டிக் கொண்டு சந்தோஷமாக வாழவில்லை, அடுத்தடுத்துப் பொலிசாரின் மிருகத்தனமான தாக்குதல்கள், மீன்களைச் சுமந்து செல்லும்லொறிகளைப்பார்த்த நண்பர் மீனவர்கள் திடீர்திடீரென இராணுவத்தினரால் தாக்கப்பட்டு சித்திரவதைப் படுத்தப்படுவதையும் அவர்களது குடும்பங்கள் சின்னாபின்னப்படுத்தப்படுவதை இதுவரை பார்த்ததில்லையா? கேட்டதில்லையா?

இதற்கெல்லாம் இறுதியான ஒரேவழி இழந்த எமது தமிழ் நாட்டை மீட்பதுதான். நண்பர் குறிப்பிட்டதுபோல் தமிழ் ஈழம் என்பது பகற்கனவு என்பதும் ஒருவகையில் சரிதான், எப்படித்தெரியுமா?இனத்தின் விடுதலைக்காக, இயக்கத்துக்காக இரவுகள் பலதூக்கமின்றி உழைக்கும் இளம்உள்ளங்கள் பகலில் சற்றுக்கண்ணயரநேர்ந்தாலும் அந்தத் தூக்கத்தில் வரும் கனவில்கூட தமிழ் ஈழத்தினைத்தான் அவர்கள் காணுகின்ருர்கள் என்பதைத்தான் நண்பர் இப்படிக் குறிப்பிட்டிருக்கிருரோ நானறியேன்.

எனவே இறுதியாகவும் எமது இனத்தின் விடுதலைக்காக உழைக்கும் உயரியபணியில் ஈடுபட நண்பரை இருகரம் நீட்டி அழைக்கிறேன்.

தி. உமாகாந்தன்

---

## புகார்

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் குழந்தைகளுக்கு மிக அவசியமான முக்கூட்டுத்தடை மருந்து இல்லையென்றும்,இவ்ஆஸ்பத்திரிக்குக் குழந்தையுடன் செல்லும் தாய்மார் ஏமாற்றத்துடன் திரும்புவதாகவும் முல்லைத்தீவு வரியிறுப்போர் சங்கம் புகார் தெரிவித்துள்ளது. (அ)

---

## நாடக விழா

கோண்டாவில், வியா

கோவிற்குளம் இந்து இளைஞர் மன்ற ஆதரவில் நாளை வெள்ளிக்கிழமை கோவிற்குளம்அமரர் ஜி. ஜி. அரங்கில் வண்ணை ஆனந்தன் தலைமையில் நாடகவிழா நடைபெறவுள்ளது. மூன்று நாடகங்கள் இதில் இடம் பெறும். (அ)

---

## வேலரும் மயிலரும்



வேலர்: அவர் ஊரோடு பகை. அவர்வீட்டுக் கல்யாண வீட்டிற்கு எப்படிப் பெருந்தொகை சனம் வந்தது.

மயிலர்: அது அந்தத் தொகுதி அபேட்சகர்கள்.

சுந்தர்

---

## ''யாழ். ஆயுர் கல்லூரியில்

# ஊழல் நிலவுவதை அனுமதிக்கக் கூடாது''

யாழ்ப்பாணம், வியா

'யாழ். சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் பிரச்சனைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கல்லூரியை நடத்துவதற்குப் பணம் இல்லை கல்லூரியின் சொந்தப்பணம் 75 ஆயிரம் ரூபாவுக்கு மேல் என்னவாயிற்றென்றே எமக்குத் தெரியாது. இப்பணத்திற்குப் பொறுப்பாகவிருந்த நிர்வாகப் பதிவாளரை கல்லூரியில் இருந்து நீக்கவேண்டும், என்று பெற்ருேர் மாணவர்கள், பழைய மாணவர்கள் கோரிக்கை விடுகிருர்கள். கல்லூரியில் தொடர்ந்தும் ஊழல் நிலவுவதை அனுமதிக்கவே கூடாது'.

மேற்கண்டவாறு யாழ். லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரிப் பெற்ருேர் சங்க அங்குராப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்படி கல்லூரி இயக்குநர் சபையின் தற்காலீக செயலாளர் டாக்டர் விசாகரெத்தினம் குறிப்பிட்டார்.

யாழ். ரஸிக ரஞ்சன சபா மண்டபத்தில் டாக்டர் எம். பொன்னையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் டாக்டர் எஸ். சிறீ விக்கினேஸ்வரா பேசுகையில் இலங்கையில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வைத்தியக் கல்லூரியை அழிவில் இருந்து பாதுகாப்பது எமது கடமையாகும் என்ருர்.

இக்கூட்டத்தில் இயக்குநர் சபையை சேர்ந்த திரு. க. சத்தியானந்தசிவம், டாக்டர் கே. எஸ். பரஞ்சோதிநாதர், திரு. அரசரத்தினம் உட்படப் பலர் பேசினுர்கள். (அ)

---

## மூதறிஞர்—

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

இனத்தை ஒரே சொத்தாகப் பெற்ருர்.

இந்நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் தலைவராக இரண்டுமுறை இருவேறு சிங்களக் கட்சிகள் அரசமைக்க வழியமைத்து தமிழ் உரிமையை வழங்குமாறு அன்புடன் கேட்டார். மறுக்கப்பட்டதன் விளைவாக தனிநாடு காணப் புறப்பட்டார். இதுவே அவர் மூட்டிய மிகப்பெரிய விடுதலைத்தீ எனலாம். 1972-ம் ஆண்டு நாவலர் மண்டபத்தில் குடியரசு சாசனத்தை எரித்து அதன்மேல் சுதந்திரவேள்வித்தீயை அணைக்கமுடியா விடுதலைப் பெருநெருப்பை மூட்டினுர்.

சமீபத்தில் யாழ். சட்டநிலையத்தில்பேசிய திரு. அ அமிர்தலிங்கம் சொன்ஞர். தந்தை சாதித்த சாதனையின் சுருக்கம் 'தீர்க்கப்பட்டதென உலகுக்கு அறிவிக்கப்பட்ட மொழிப் பிரச்னையை இன்றுவரை தீர்க்கப்படாத பிரச்னையாக மாற்றியதுதான்' என்று அந்த தீர்க்கப்படாத மொழிப்பிரச்னையால் ஒரு தனிநாட்டையே உருவாக்க இலங்கைக்கண்ட அரசுக்கள் செய்துவிட்டன என்பதை உலகுக்கு தெட்டத்தெளிவாகக் காட்டிய அரசியல் மாமேதை தந்தைசெல்வா எனலாம். இத்தகைய பெருந்தலைவரை தமிழ்பேசும் மக்கள் இழந்து 31 நாட்கள் சென்றுவிட்டபோதிலும் இன்னமும் அந்த அதிர்ச்சியில் இருந்து விடுபடவில்லை. இன்னும் அவர் பற்றிப் பேசுகிருர்கள். எழுத்துலகில் அவரின் சாதனைகள் கட்டுரைகளாகக் குவிக்கப்படுகின்றன. அரசியல் உலகில் அவரின் 'தமிழ்ஈழ'க் கொள்கையை முன்வைத்தே பல அரசியல்வாதிகளும் தேர்தலுக்குப் புறப்பட்டுள்ளார்கள். இவைகளைப் பார்க்கும்போது ஒரு மாதம் அல்ல ஒருயுகமே சென்ருலும் தந்தையின் நினைவைத் தமிழ்மக்கள் – தமிழ்பேசும்மக்கள்– மறக்கமாட்டார்கள் என்பதுநிச்சயம். [அ]

---

## முதலிடம்

கிளிநொச்சி, புதன்

வட்டக்கச்சிவிசேஷ விவசாயக் திட்டப் பிரதேசப் பிரிவில் உள்ள இளம்விவசாயிகள் கழகங்களுக்கிடையே நடைபெற்ற பொருட்காட்சிப் போட்டியில் முதலாம் இடத்தை, திருவள்ளுவர். இ. வி. க. வட்டக்கச்சியும், இரண்டாம் இடத்தை அண்ணா. இ. வி. க. இராமநாதபுரமும் மூன்ரும் இடத்தை முரசு மோட்டை இ. வி. கழகமும் பெற்றன. விசேஷ திட்ட முகாமையாளர் திரு. எஸ். கிருஷ்ண பிள்ளை பரிசில்கள் வழங்கினர்.

# பிறப்புப்பத்திரம் வழங்க படிவம் இல்லாமல் அவதி

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் கச்சேரி பிறப்பு பதிவுகாரர் கந்தோரில் பிறப்புப்பத்திரம் எழுதுவதற்கான படிவங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதினால் சுமார் 3000 விண்ணப்பங்கள் பிறப்புப் பத்திரங்கள் வழங்க முடியாமல் தேங்கிக்கிடக்கின்றன.

தினமும் நூற்றுக்கணக்கானோர் பிறப்புக்கந்தோருக்கு பிறப்புபத்திரம் கோரி விண்ணப்பிக்கின்றபோதிலும் உரிய படிவம் கைவசம் இல்லாதிருப்பதால் பிறப்புப் பத்திரம் வழங்கமுடியாதிருப்பதாக பொதுமக்களுக்கு சம்பந்தபட்ட அதிகாரிகள் கூறிவருவதாகத் தெரியவருகிறது.

அவசர தேவைகளுக்குக்கூட பிறப்புப்பத்திரம் வழங்கமுடியாதிருப்பதாகவும் உடனடியாக படிவங்களை அனுப்பியுதவுமாறும் யாழ். மாவட்ட பதிவாளர்கந்தோர் உத்தியோகத்தர்கள் கொழும்பு தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டிருந்தபோதிலும் உரியவேளையில் படிவங்கள் இதுவரை கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

பிறப்புப்பத்திரம்பெறுவதில் உள்ள கஷ்டங்கள் பற்றி உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது உரிய படிவம் கிடைக்கப்பெற்றதும் காலதாமதமின்றி வழங்கநடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (ஆ)

# 85 வயது வயோதிபர் மர்மக்கொலை

## குப்பிழானில் திகில் சம்பவம்

யாழ்ப்பாணம், வியா.

85 வயது வயோதிபர் ஒருவர் தமது வீட்டில் இரவு வேளை பயங்கரமாக அடித்துக் கொலை செய்யப்பட்டுக் கிடக்கக் காணப்பட்டார்.

நெஞ்சை உருக்கும்இச்சம்பவம் குப்பிழானில் நிகழ்ந்துள்ளது. வீரகத்தி சுப்பையா (85 வயது) என்ற வயோதிபரே இவ்விதம் மண்டையில் பலத்த காயத்துடன் கொலை செய்யப்பட்டுக் கிடந்தவராவார்.

இக்கொலை பற்றிய தகவல் கிடைத்ததும் சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜனுப் இ. ஏ. ஏ. காதர் உடன் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணையில் ஈடுபட்டார்.

கொலைக்கான காரணம் தெரியவில்லை.

இக்கொலையின் பின்னணியில் உள்ள மர்மங்களைத் துலக்குவதிலும், மர்மக்கொலைஞர்களைத் தேடுவதிலும் இன்ஸ்பெக்டர் காதர் தொடர்ந்து தீவிரமாக ஈடுபட்டுள்ளார். (உ)

# ஆசிரியர்கள் கட்டுப்பணம் செலுத்துவர்

யாழ்ப்பாணம், வியா.

உடுப்பிட்டித் தொகுதி தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர் திரு. த. இராஜலிங்கத்தின் தேர்தல் கட்டுப்பணத்தை கட்டுவதற்கு பலர் விரும்பியிருந்தும் ஆசிரியர்களே இப்பணத்தை செலுத்துவார்கள்.

தேர்தல் பிரசாரவேலைகளை தமிழ் இளைஞர் பேரவையினர் கவனித்து வருகின்றனர். கட்சிக்கிளைகளையும், தேர்தல் காரியாலயங்களையும் திறப்பதற்குப் பொறுப்பாக குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது. (இ)

# "விழாவினால் மட்டும் இலட்சியத்தை அடைய முடியாது"

மட்டக்களப்பு, புதன்

"கிழக்கு மாகாணக் கல்வித் துறையில் பின்தங்கிய மாகாணம் என்று கூறப்படுகிறது, குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை மேற்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவு, சகல துறைகளிலும் அபிவிருத்தி குன்றிய நிலையில் இருந்துவருவதற்கு கல்வியில் ஆர்வம் காட்டாமையே ஆகும்'.

இவ்வாறு சுவாமி விபுலானந்தரின் 85வது பிறந்ததினத்தையொட்டி வவுணதீவு விபுலானந்த மைதானத்தில் நடைபெற்ற தமிழ்ப் பெருவிழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் மட்டக்களப்பு வடக்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. க. மகேஸ்வரலிங்கம் குறிப்பிட்டார்.

திரு. க. சுப்பையாபிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழா ஆரம்பமாகுமுன்னர் அடிகளாரின் திருவுருவச்சிலைக்கு ஆலய பரிபாலனசபைத் தலைவர் திரு. மு. தங்கராசா மலர்மாலை அணிவித்து அஞ்சலி செய்தார்.

திரு. மகேஸ்வரலிங்கம் தமது உரையில் மேலும் கூறியதாவது:

'படுவான்கரை மிகவும் பின்தங்கியது. ஆனால் விவசாயத்துறையில் முன்னேறி 'வசதி' காணப்படுகிறது'. இப்பகுதியில் கூட்டுறவுசங்கத்தின் கிளை முகாமையாளர் பதவி தொடக்கம் ஏனைய பதவிகள் வரைக்கும் மட்டக்களப்பு நகரப்புறவாசிகளே தெரிவுசெய்யப்படுகிறார்கள். கல்வியின் படுவான்கரைப்பகுதி முன்னேறவேண்டும். அப்பொழுதுதான் எமது உரிமைகளையும் பெற்றுக்கொள்ளலாம். கல்வித்துறையில் முன்னேறினால் மட்டுமே படுவான்கரை விமோசனமடையும். சுவாமி விபுலானந்தரின் நினைவுதினங்களையொட்டி பிரமாண்டமான விழா எடுத்தால் மட்டும் போதாது. விபுலானந்தர் வாழ்ந்தகாலம், மட்டக்களப்புக்குக் கல்வித்துறையிலும் சமயத்துறையிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய காலமாகும். நாம் அவர்காட்டியவழியில்-கல்வித்துறையில் அபிவிருத்தி அடைவதுதான் அடிகளாருக்குச்செய்யும்மிகவும்உயர்ந்த சாந்தி ஆகும்'.

'அடிகளாருக்கு சிலை நிறுவி விழாக்கொண்டாடி அவரை நினைவு கூர்வதில் பொருளாதாரம் குன்றிய வவுணதீவு மக்கள் சிறப்பான இடத்தை இப்பகுதியில் பெற்றுவிட்டார்கள். ஆனால் அடிகளாரின் இலட்சியத்தைப் பூர்த்திசெய்வதாயின் கல்வியில் பூரணத்துவம் பெறவேண்டும்' என்றார்.

திருவாளர்கள் வி. தங்கத்துரை, மா. நடராசா, க. வரதராஜா, க. கனகரெட்ணம், பூ. குணரெட்ணம் ஆகியோரும் விழாவில் உரையாற்றினர். விழாக்குழுத் தலைவர் திரு. கி. சித்திரவேல் தலைமையில் நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளை கரையாக்கன் தீவைச் சேர்ந்த விவசாயப் பிரமுகரான திரு. க. சண்முகசுந்தரம் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். புதுநகர் திருநாளினி பெஞ்சமினின் நடனநிகழ்ச்சியும், அரசடிச் சேனை வைக்கோல்கொள்வனவு நிலையத்தினரின் 'நான் உன்னைத் தேடுகிறேன்' நாடகமும் இடம்பெற்றன.

### ஸ்ரீ. ல. சு. கட்சி மீண்டும் ஆட்சிக்குவந்ததும்

# மூன்று லட்சம் பேருக்கு வேலை வழங்கத் திட்டம்

— விவசாய அமைச்சர்

கண்டி, புதன்

"எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றிபெற்றதும், குறுகியகாலத்தில் 3 லட்சம் பேருக்கு வேலை வழங்கப்படும். பெரும் தொழிற்சாலைகளைத் தேசியமாமாக்கியும், புதிதாக கைத்தொழில்நிறுவனங்களை ஆரம்பித்தும் மூன்று லட்சம் பேருக்கு வேலை வழங்கப்படும். இதற்கான விரிவான திட்டம் இப்பொழுதே எம்மிடம் உண்டு" என்று எடன்குவ என்னுமிடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் விவசாய அமைச்சர் ஹெக்டர் கொப்பேக்கடுவ பேசுகையில் கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் மற்றும் தொண்டமானுக்கும் சொந்தமான பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலத்தை தேசியமயமாக்கிவிட்டோம். இந்த நிலத்தை 1970க்கு முன்னர் ஐக்கிய தேசியக்கட்சி செய்ததுபோல எம். பிக்களுக்கும் அமைச்சர்களுக்கும் பகிர்ந்தளிக்கவில்லை. ஸ்ரீ. ல. சு. கட்சி அரசாங்கம் எவ்விதமான பாகுபாடுமின்றி தேசியமயமாக்கப்பட்ட நிலத்தை மக்களுக்கு வழங்கியிருக்கிறது ஐ. தே. கட்சி ஓர் அங்குல நிலத்தைக்கூட வறியவர்களுக்குக் கொடுக்கவில்லை. இது மட்டுமின்றி நாட்டின் நன்மையைக் கருதிக்கூட ஓர் அங்குலநிலத்தைபயன்படுத்தவில்லை. தங்களின் வயிற்றையே நிரப்பினர்கள். எமது அரசாங்கம் இதுவரை 1,10,000 ஏக்கர் நிலத்தை நிலமில்லாதவர்களுக்கு வழங்கியிருக்கிறது, இது மக்களுக்குத் தெரியும்" என்று அமைச்சர் கூறினர்.

# வைத்தியசங்க நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறைத் தொகுதி சித்த ஆயுர்வேத வைத்திய சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் டாக்டர் சி. இராசரெத்தினம் தலைமையில் நடைபெற்றபோது நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: டாக்டர் க. சிற்றம்பலம், உபதலைவர்: டாக்டர் ஐ. கந்தையா, இணைச்செயலாளர்கள்; கே. வி. கே. திருலோகமூர்த்தி, பி. வி. ஜே. நிக்கிளஸ், பொருளாளர்: டாக்டர் ஐ. பாலசுப்பிரமணியம், 10பேர் கொண்ட நிர்வாக குழுவினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

• • •

# இருளில்மூழ்கியது

உடுப்பிட்டி, புதன்

நெல்லியடி அரசடிவீதி இருளில் மூழ்கியுள்ளதால் இரவில் பொதுமக்களும், பெண்களும் அவதியுற்றுவருகின்றனர்.

அரசடி வீதியிலுள்ள மின் கம்பங்களில் ஏற்பட்டுள்ளமின் கோளாறினால் அவற்றில் பொருத்தப்பட்டுள்ள பல்புகள் எரிவதில்லை. இதனால் இரவில் இப்பகுதிப் பொதுமக்களும், வீடுதிரும்பும் மாணவர்களும் மாணவிகளும் மிகவும் கஷ்டமடைந்துவருகின்றனர்.

# இந்துக்கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரிக்கும் இடையில் 14 வயதிற்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் இந்துக்கல்லூரி வெற்றியீட்டியது.

தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு மகாஜனக் கல்லூரி அணித் தலைவனுக செல்வன் ரகுராஜனும் இந்துக்கல்லூரி அணித்தலைவனுக செல்வன் ஸ்ரீ தரனும்விளையாடினர்கள். முதலாவது ஆட்டத்தில் மகாஜனக்கல்லூரிக்கு 54 ஓட்டங்களும், இந்துக்கல்லூரிக்கு109 ஓட்டங்களும்கிடைத்தன. இரண்டாவது ஆட்டத்தில் மகாஜனக்கல்லூரி 7 விக்கட் நஷ்டத்திற்கு 60 ஓட்டங்கள் எடுத்தது. இந்துக்கல்லூரி புள்ளிகளாலும் ஓட்டத்தாலும் மகாஜனவை வென்றது. இந்துக்கல்லூரி அணியில் ரூபானந்தசிவம் அதிக ஓட்டமாக 21 ரன்களை எடுத்தார். ந. ஜெயக்குமார், வைத்தியநாதன், மகேந்திரன்ஆகியோர் சிறப்பாக பந்துவீசியும், துடுப்பெடுத்தும் ஆடினர்கள். [க!{

# டெடிகமவில் ருக்மன்?

கொழும்பு, புதன்

திரு. ருக்மன் சேனநாயக்காவுக்கு ஐக்கியதேசியக் கட்சி அபேட்சகர் நியமனம் கிடைக்குமா?

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ருக்மன் சேனநாயக்கா ஐக்கியதேசியக்கட்சி சார்பில் போட்டியிட விரும்புவதாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சுயேச்சையாகவோ அல்லது ஐ. தே. கட்சி தவிர்ந்த ஏனைய கட்சி உறுப்பினராகவோ போட்டியிட ருக்மன் விரும்பவில்லையாம்.

இதேநேரத்தில் டெடிகம தொகுதியில் ருக்மன் சேனநாயக்காவை ஐ. தே. கட்சி அபேட்சகராக நிறுத்தமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நியமனம் வழங்கப்பட்டால் டெடிகம தொகுதிக்கு ஏற்கனவே கட்சி அபேட்சகராகத் தெரிவுசெய்யப்பட்ட நிஸங்கா விஜயரத்ன பொல்காவலைத்தொகுதியில் நிறுத்தப்படலாம் எனறு தெரியவருகிறது.

திரு ருக்மன் சேனநாயக்கா கட்சிக் கட்டுப்பாட்டை மீறினர்' என்ற காரணத்துக்காக கடந்த வருடம் ஐதே கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.

# அமெரிக்க பக்தர்களின் பஜனை

யாழ்ப்பாணம்,வியாழன்

அமெரிக்காவிலிருந்து ஈழம் வந்துள்ள ஹரேகிருஷ்ண பக்தர்கள் கோஷ்டி நாளை வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள் கோவிலில் பஜனைசெய்வார்கள் அவர்களுடன் திருமதி சரஸ்வதி பாக்கியராஜாவும் இந்தக் கிருஷ்ணபஜனையிலீடுபடுவார்கள். (கி)

......

# மட்டு நகரில் அறுவர் போட்டி

மட்டக்களப்பு,புதன்

பொதுத் தேர்தலில் மட்டக்களப்புத் தொகுதியில் அறுவர் போட்டியிடவிருக்கிறார்கள். ஸ்ரீல.சு.கட்சிசார்பில் இருவரும், ஐ. தே. க. வில் ஒருவரும் த.வி. கூட்டணியில் இருவரும் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடன் ஓய்வுபெற்ற ஆசிரியரும் கவிஞருமான திரு. வி. விநாகமூர்த்தியும் சுயேச்சையாக போட்டியிடுகின்றார்.

......

# நியமனம்

முல்லைத்தீவு, புதன்

திரு. க. நடேஸ்வரன், செல்வி வெல்கஸ்—இந்திராணி ஆகியோர் செம்மலை கனிஷ்டஉயர் தரவித்தியாலயத்திற்கும், திரு சு. சுந்தரலிங்கம் கொக்கிளாய் கனிஷ்ட உயர்தரவித்தியாலயத்திற்கும், திரு. அன்ரன் ஜெகநாதன் வற்றுப்பளை கனிஷ்ட உயர்தரவித்தியாலயத்திற்கும் தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளார்கள். (இ)

# நூறுஏக்கரில்

கிளிநொச்சி,புதன்

கிளிநொச்சியை அடுத்துள்ள அக்காராயன் பகுதியில் நூறு ஏக்கர்காணியில் பண்ணை வளர்ப்பு முறை ஆரம்பிக்க பிரதேச அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஐம்பது ஏக்கரில் மாட்டுப் பண்ணையும் ஐம்பது ஏக்கரில் நெல்உற்பத்தியும் ஆரம்பிக்கவுள்ளதாக பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார் கரைச்சி காரியாதிகாரி திரு எஸ். யோகநாதன் இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

......

# பிரசாரம் ஆரம்பம்

கிளிநொச்சி,புதன்

கிளிநொச்சித் தொகுதி தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர் திரு. வீ. ஆனந்தசங்கரியை ஆதரித்து கிளிநொச்சிப்பகுதியில் உள்ள பலபாகங்களிலும் தேர்தல் பிரசார வேலைகளை இளைஞர் பேரவையினரும், மகளிர் பேரவையினரும் ஆரம்பித்துள்ளனர்.

...—

# பாடசாலைக்கு இருமாடிக் கட்டிடம்

உடுப்பிட்டி, புதன்

கரவெட்டி திரு இருதயக் கல்லூரிக்கு இருமாடிக்கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் 64,000 ரூபாவை ஒதுக்கியுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இந்த நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென்றும், இருமாடிக்கட்டிடத்திற்கான வேலைகள் விரைவில் ஆரப்பிக்கப்படவுள்ளதென்றும் இக் கல்லூரி அதிபர் திரு. தோமஸ் ஈப்பன் தெரிவித்தார்.

கொழும்பு. புதன்

ஸ்ரீ. ல. சு. கட்சியின் எந்த ஒரு அபேட்சகருக்கும் எச்சந்தர்ப்பத்திலும் எமது கட்சி ஆதரவளிக்காது, என்று கம்யூனிஸ்ட் கட்சியின் உப தலைவர் திரு. கே. பி. சில்வா தெரிவித்துள்ளார்.

வெலிங்டன் ஃ முத்துராமன் ஃ சுஜாதா
(யாழ். நகர்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
**வாழ்ந்து காட்டுகிறேன்**

லிடோ போன்: 7693 விஜயகுமார் — லதா
(யாழ். நகர்) நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
**சொர்க்கத்தில் திருமணம்**
(கலர்)

REGAL Daily: 4-45,
(JAFFNA) 7-00 & 9-30 p. m.
2ND CROWDED WEEK
ALAN PRICE
**ALFIE DARLING**
(Color-adults only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

இதயம் கனியாகும்
114 வது வெற்றித் தினம்!
மனோகரா எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
**இதயக்கனி**
(ஈஸ்ட்மன்கலர்)

ஸ்ரீதர் கல்யாணகுமார் — தேவிகா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள் நடித்த
**நெஞ்சம் மறப்பதில்லை**

ராணி எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
**நாளை நமதே**
(ஈஸ்ட்மன் கலர்)

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15 & 9.45
GRAND RELEASE
**RUSSIAN ROULETTE**

மர்மக் கதைகளுக்கே முடியாய் விளங்குவது.
007 பாணியில் துப்பாக்கியோடு சுற்றிச் சுழன்று திரிகிறன் ஜோஜ் சேகால்.
ஜேம்ஸ் பாண்ட் படங்களுக்குப் பின் எந்த ஒரு படமும் இந்தமாதிரி ரசிகர்களை தமது ஆசனங்களில் நின்று பார்க்கவைத்ததில்லை.
தம் ஆசனங்களின் விளிம்பில் அல்லாமல் சௌகரியமாக இருந்து யாராவது பார்க்கக் கூடுமானுல் இப் படமாளிகையையே அவருக்குக் கையளிக்கத் தயாராயுள்ளோம்.
அத்தனை மர்மம் - விறுவிறுப்பு - அதிர்ச்சி மிக்க சம்பவங்கள் நிறைந்தது கொழும்பில் பல வாரங்களாக வெற்றிகரமாக ஓடியது.
**Thrilling - Exciting - Demanding**
(சில நாட்களுக்கு மட்டும்)


# 'பழிவாங்கல் கூடாது

(சாய்ந்தமருது நிருபர்)

புதிய குடியரசு அமைப்பின் கீழ் ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்பட்டுள்ளதால் அந்த உரிமையை நேரடியாகவோ மறைமுகமாகவோ உபயோகிக்கும் ஆசிரியர் சமூகம் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் பழிவாங்கப்படக் கூடாது என்று அரசியல் கட்சிகள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதிஅளிக்க வேண்டுமெனக் கோரும் தீர்மானம் ஒன்று அண்மையில் நடைபெற்ற கல்முனை மாவட்ட இஸ்லாமிய ஆசிரியர் சங்கக் கிளைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## கரும்பு உற்பத்தி

பொத்துவிலை அடுத்துள்ள லகுகலை என்னுமிடத்தில் பெரும் தொகையான ஏக்கர் காணியில் கல்ஓயா சீனிக் கூட்டுத்தாபனத்துக்கென கரும்பு உற்பத்தி செய்யப்படவிருக்கின்றது.

## நடவடிக்கைக் குழுவில்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழுவின் அங்கத்தவர்களாக இலங்கை முஸ்லிம் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சட்டத்தரணி ஜனுப் எம். எச். எம் அஷ்ரப். பசீல் மஜீது ஆகிய இருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## கோழித்தீன் உற்பத்திநிலையம்

கோமாரி என்னுமிடத்தில் கோழித்தீன் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு பகுதி அபிவிருத்திச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## நியமனம்

சட்டத்தரணிகள் ஜனுப் தாஹா செய்னுதீர், ஜனுப் யூ. எல். எம். மொகிதீன் ஆகிய இருவரும் கல்முனை நீதி நிருவாகப் பகுதிக்கான சமாதான நீதிபதியாக உத்தியோகத் தொடர்பற்ற நீதிபதியாகவும் நீதி அமைச்சரினல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## அலுவலகம்

நிந்தவூர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், இரண்டரை லட்சம் ரூபா செலவில் நிறுவப்படவிருக்கின்றது. அம்பாறை மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களும் புதிதாகக் கட்டப்படவிருக்கின்றது.

## பிடவை விநியோகம்

சாய்ந்தமருது ப. நோ. கூ. சங்கம் அதன் நுகர்ச்சிப் பகுதிக் கிளைகளின் மூலம் பாவனையாளர்களுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பிடவைகளை தற்போது வழங்கிவருகின்றது.

## இயந்திரப் படகுகள்

கல்முனைத் தொகுதி மீனவர் கூட்டுறவுச் சங்கத்துக்கு மீன்பிடி இலாகாவினுல் 30 உள்ளிணைப்பு இயந்திரப்படகுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 30 படகுகளை விரைவில் வழங்க மேற்படி இலாகா சம்மதித்துள்ளது.

## விற்பனை நிலையம்

கல்முனைத் தொகுதி மீனவர் கூட்டுறவுச் சங்கம், சாய்ந்தமருது, கல்முனை ஆகிய இடங்களிலுள்ள பொதுச் சந்தைகளில் மீன் விற்பனை நிலையங்களை நிறுவ ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

## கட்டட வேலைகள்

அக்கரைப்பற்று எழுவட்டவான் விளையாட்டு மைதானத்தில் நிறுவப்பட்டு வரும் பார்வையாளர் மண்டபத்தின் இரண்டாம்கட்ட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. இதற்காக அக்கரைப்பற்று மத்திய கிராம சபை 7,500 ரூபாவை ஒதுக்கியுள்ளது.

## குழாய்நீர் வசதி

அம்பாறைத் தொகுதியைச் சேர்ந்த உகனைக் கிராமத்தில் வாழும் மக்களின் நலன் கருதி மிகவிரைவில் குழாய் நீர்த் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக பிரதி நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலை அமைப்பு அமைச்சர் திரு. செனரத் சோமரத்தன இரண்டு லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

## மின்சார விநியோகம்

கிராமிய மின்திட்டத்தின் கீழ் இலங்கை மின்சார சபை அம்பாறைத் தொகுதியைச் சேர்ந்த வீரகொட உகனை ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் இணைக்கும் வேலைகளைத் தற்போது துரிதமாக, மேற்கொண்டுள்ளது.

## வெற்றி

அக்கரைப்பற்று யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்கும் கல்முனை கிரீன்லைட் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே அக்கரைப்பற்று தர்மசங்கரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் அக்கரைப்பற்று 3—1 கோல்களால் வெற்றி பெற்றது.

அக்கரைப்பற்று முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கும் அட்டாளைச் சேனை முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் அக்கரைப்பற்று கோஷ்டி வெற்றி பெற்றது.

## நெசவுநிலையம்

பொத்துவில் பட்டிப்பளை அபிவிருத்திச் சபையின் ஆதரவில் பொத்துவில் நெசவு நிலையம் ஒன்று திறக்கப்படவிருக்கின்றது. இந்நிலையம் ஒன்று திறக்கப்படவிருக்கின்றது. இந்நிலையம் திறக்கப்பட்டதும் படித்து வேலையற்றிருக்கும் அதிகமான வாலிபர்களுக்கு வேலைகிடைக்கும்.

## நீர்த்தடாகம்

கல்முனை மஹ்மூத் பாலிகா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில், வித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் முயற்சியால் சுமார் 7 ஆயிரம் ரூபா செலவில் நவீன நீர்த்தடாகம் குறுகிய தூரபாதையும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

# சுயேட்சையாக —

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நான் சுயேச்சையாகப் போட்டியிடுவேன் என்று ஒரு பத்திரிகையில் வெளி வந்த செய்தியில் எதுவித உண்மையுமில்லை.

எனக்கு வேட்பாளர் நியமனம் கிடைக்கவில்லையென்பதையிட்டு எனது நண்பர்கள் ஆதரவாளர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியும் பரபரப்பும் ஏற்பட்டு அவர்கள் பல்வேறு கோரிக்கைகளையும் முன் வைத்து மறியல் செய்து வற்புறுத்தியபோதிலும் நான் சுயேச்சையாகப் போட்டியிடுவேன் என்று கூறவில்லை.

முல்லைத்தீவுத் தொகுதி வேட்பாளர் தெரிவில் அதிருப்தியடைந்த அத்தொகுதிப் பெரும்பான்மையான ஆதரவாளர்கள் முல்லைத்தீவுத் தொகுதியில் போட்டியிடும்படி வற்புறுத்தியபோது நான் ஒரு கட்சிக்குக் கட்டுப்பட்டவன் என்பதைச் சுட்டிக்காட்டி அதன் அனுமதியின்றி போட்டியிட முடியாதென்பதை அவர்களுக்குத் தெரிவித்தேன், அத்துடன் அவர்கள் விரும்பும் வேட்பாளர் மாற்றத்துக்கான முயற்சிகளை தலைமைப் பீடத்துடன் தொடர்பு கொண்டு செய்யும்படி வேண்டினேன். அந்த முயற்சியில் தொகுதியின் கூட்டணி ஆதரவாளர்கள் இன்னமும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறுர்களென்றே நம்புகிறேன்.

## களங்கம் கற்பிக்கும் நோக்கு

நான் சுயேச்சையாகப் போட்டியிடுவேன் என்றும் அதைத் தொடர்ந்து ஒழுங்கு நடவடிக்கை எடுத்து நான் நீக்கப்படுவேன் என்றும் வெளிவந்த செய்தி என் மீதுகளங்கம் கற்பிக்கவும் ஆதரவாளர்கள் மத்தியில் ஒரு அதிருப்தியை ஏற்படுத்தவும் எனக்கு நியமனம் கிடைக்காததால் ஏற்பட்டுள்ள பரபரப்பு நிலைமையைத் திசைதிருப்பவும் மேற்கொண்ட காலத்துக்கு முந்திய வேண்டாத செயல் எனக்கருதுகிறேன்,

இந்தமாதிரியான தவருன செய்திகள் பரப்பப்படுவதும் பத்திரிகையில் வெளிவருவதும் என மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட சிலரால்லேதான் என்று நான் கருதுகிறேன், அத்தகையவர்கள் நான் இயக்கத்திலிருப்பது தங்களுக்குப் பெரும் இடையூருக இருப்பதெனக் கருதித்தான் இப்படித் தவருன செய்திகளைப் பரப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறுர்கள்.

பிரச்னை தோன்றிய நாளிலிருந்து இன்றுவரை என்னையோ எனது நலனில் அக்கறைகொண்ட எவரையுமோ இயக்கத்தைச்சேர்ந்த பொறுப்பானவர் எவரும் இந்தப் பிரச்னை பற்றி கலந்தாலோசிக்கவோ சமரச முயற்சி மேற்கொள்ளவோ முன்வரவில்லை.

எந்தசூழ்நிலையிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ்ஈழம் என்ற இலட்சியத்திலிருந்து இம்மியளவும் பிறழமாட்டேன் என்பதை இந்த இயக்கத்தில் உண்மையாக ஈடுபட்டுள்ளவர்கள் மறுக்கமாட்டார்கள் என்பது எனது எண்ணம். (உ)

---

யாழ்ப்பாணம், வியாழன் காங்கேசன்துறைப் பகுதியில் நடைபெறும் அசம்பாவிதங்களைத் தொடர்ந்து இப் பகுதியில் உள்ள, முக்கிய சந்திகளில் உள்ள தெரு அறிவிப்புத்தூணகளில் இருக்கும் தமிழ் எழுத்துக்கள் பல தார்பூசி அழிக்கப்பட்டுள்ளன. (கெ-இ)

---


புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
எம் ஜி ஆர் - சரோஜாதேவி
**பணக்காரக் குடும்பம்**

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்-மஞ்சுளா
**புதுவெள்ளம்**

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி ஆர் — தேவிகா
**ஆனந்தஜோதி**

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன், உஷா நந்தினி, சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்) விஜயவேல் பிலிம்ஸாரின்
**மனிதனும்தெய்வமாகலாம்**
(ஈட்ஸ்மன் கலர்)

"திருவருள்" புரியும் பக்திரசமான 3 வது வாரம்
ராஜா (யாழ்நகர்) போன்: 7180 தினசரி 4 காட்சிகள்
ஏ.வி.எம்.ராஜன், கிருபானந்தவாரியார் நாகேஷ், சுந்தரராஜன், நடித்த
தேவரின் **திருவருள்**
(ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு: பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்குசெய்து கொள்ளலாம்.

ஈழநாடு
EELANADU

# தமிழ் மக்கள் முன்னணி போட்டியிட முடிவு

## வேட்பாளர் பட்டியல் அடுத்த வாரம் வெளியாகும்

யாழ்ப்பாணம்,வியாழன்

இம்மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட தமிழ்மக்கள்முன்னணி, எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழர்வாழும் பல தொகுதிகளிலும் போட்டியிட முடிவுசெய்துள்ளது. இம்மாத முடிவுக்குள் முன்னணியின் முழுமையான வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

''தமிழ்மக்கள் முன்னணி எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும். எமதுஇயக்கத்தின் கொள்கைத்திட்டங்களுக்கமைய இயங்கக்கூடிய ஏனைய அரசியல்கட்சிகளுடன் சேர்ந்து தமிழினத்தின் முக்கியாம்சப் பிரச்னைகளை முன்வைத்துத் தேர்தலில்போட்டியிடுவோம். எமது அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார மேம்பாட்டிற்காக நாம்தொடர்ந்து போராடுவோம்'' என்று தமிழ் மக்கள்முன்னணியின் பொதுக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப்பேசிய திரு. யோகேந்திரா துரைச்சாமி குறிப்பிட்டார்.

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் சேர். துரைச்சாமி வீதியிலுள்ள மகேந்திரா இல்லத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் முன்னாள் வட்டுக் கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராசா பேசுகையில்கூறியதாவது: ''தமிழ் மக்கள் தொடர்ந்து வெறும் சுலோகங்களின் பின்னால் செல்லமுடியாது. தமிழினம் தலைநிமிர்ந்து வாழத்தக்க பொருளாதாரஅரசியல் திட்டங்களை முன்வைத்து உழைக்கவேண்டும். இன்றைய காலகட்டத்தில் தமிழ்மக்கள் விழிப்படைந்துள்ளனர். வெறுந்தேர்தலை எதிர்நோக்குபவர்களையும் பொருளாதார அரசியல் சுபீட்சப்பாதையில் முன்னின்று போராடிவருபவர்களையும் மக்கள் இனங்கண்டுள்ளார்கள். நாம் தமிழினத்தின் நாகரிகமான சனநாயகப்பண்புகளைப் பாதுகாத்து எமதுஇயக்கத்தின்பால் முழுஇனத்தினது கவனத்தையும் ஈர்ந்துவெற்றி பெறுவது நிச்சயமானது''

திரு. நாவேந்தன் பேசுகையில் ''எமது இயக்கம் தேர்தலில் போட்டியிடுவதுடன் நில்லாது தொடர்ந்து தமிழ்மக்களின் சகல மேம்பாட்டிற்காகவும் போராடும். தேர்தல் என்பது ஒரு கருவியேதவிர தமிழ் மக்கள் இயக்கத்தின் குறிக்கோள் அதுவல்ல. நாட்டில் உள்ள சகல முற்போக்குச்சக்திகளின் நட்புறவுடன் தமிழர் உரிமைகளை வென்றெடுப்பதுவே எமது தலையாய இலட்சியமாகும்''.

### நிர்வாகி என்று கூறினர்

இக் கூட்டத்தில் தமிழ் மக்கள் முன்னணியின் தலைவராக திரு. யோகேந்திரா துரைச்சாமியும் துணைத்தலைவராக வட்டுக்கோட்டை முன்னாள் எம். பி திரு. ஆ.தியாகராசாவும் இணைச் செயலாளர்களாக திருவாளர்கள் நாவேந்தன், ச. குலசூரியன் ஆகியோரும் பொருளாளராக திரு. கே. வைரமுத்து பீ.ஏ.யும். தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் பத்துப்போர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் முன்னணி போட்டியிடுவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஊர்காவற்றுறை, வட்டுக் கோட்டை, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் பற்றித் தீர்மானித்ததுடன் ஏனைய தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் நியமனம் பற்றி ஆராய்ந்து இம்மாத முடிவுக்குள் முழுமையானவேட்பாளர் பட்டியலை வெளியிடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

# 'தனித் தமிழ்நாடு பெறமுடியாத ஒன்றல்ல''

—வி குமாரசாமி

யாழ்ப்பாணம், வியாழன்

''தமிழ் ஈழத்தைப் பெறுவதற்கு நான் என்ன தியாகம் செய்யவேண்டுமானாலும் தயாராக இருக்கிறேன். அதற்காக மற்றவர்கள் நடாத்தும் இயக்கங்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவேன். இதுதான் எனது கொள்கை,''

சாவகச்சேரி 'சரஸ்வதி பூங்காவில்' நடந்த தமிழ்க்காங்கிரஸ் ஆதரவாளர்களின் கூட்டத்தில் பேசிய தமிழ்க்காங்கிரஸ் உப தலைவரும், முன்னாள் சாவகச்சேரி எம். பியுமான திரு. வி. குமாரசுவாமி மேற்கண்டவாறு கூறினார். திரு. எஸ். சரவணமுத்து தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் ''திரு. குமாரசுவாமி சாவகச்சேரித் தொகுதியில் போட்டியிடவேண்டும்'' என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

திரு. வி. குமாரசுவாமி மேலும் கூறியதாவது;-

''தனிக் தமிழ்நாடு பெறமுடியாத ஒன்றல்ல. ஆனால் அதற்கான வழியில் செல்லவேண்டும். திட்டமிட்டுச் செயலில் இறங்கினால் விரைவில் தமிழ்நாடு பெறலாம்.

''தமிழ்நாடு பெறுவதற்கும் சிங்களக் கட்சிகளிடம் செல்லத் தேவையில்லை. அவர்கள் தரவும் மாட்டார்கள். தமிழ்ப் பகுதிகளைப் பொருளாதாரத் துறையில் அபிவிருத்தி செய்து உணவில் தன்னிறைவு கண்டால் தமிழ் நாடு தானாகவே கிடைக்கும்.

''தமிழ்ப் பிரதேசங்களை நாம் ஆளக்கூடிய ஒரு நிலையை பெற்றுவிட்டால், நாமாகவே தமிழ்நாட்டை நிலைநாட்டலாம்.

''கடந்த 20 வருட காலமாகத் தமிழ்ப் பகுதிகளில் எவ்வித அபிவிருத்தியும் இடம் பெறவில்லை. இந்த நிலையில் 'தமிழ் ஈழம்' என்று மேடைகளில் பேசுவதினாலும், சுவர்களில் எழுதுவதினாலும் அது கிடைத்துவிடாது.

''தமிழ் ஈழம் பெறுவதற்கு நான் முன்னின்றும் மற்றும் இயக்கங்களுடன் சேர்ந்தும் உழைப்பேன். ஜி. ஜி. பொன்னம்பலத்தின் 'தமிழ் ஈழக் கொள்கைப்படி' நிற்பேன்.

மானிப்பாய்த் தொகுதியில் தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணி சார்பில் போட்டியிடும் திரு. ப. முதலியார், சாவகச்சேரி நகரசபை முன்னாள் தலைவர் திரு. சு. கனகரத்தினம், திரு. சு. பரமானந்தன், திரு. கு. கமலதாசன், முன்னாள் அதிபர் திரு. ஆர். ரி. சுப்பிரமணியம், திரு. வெ சின்னத்தம்பி, திரு. வி. ஜெயபாலசிங்கம், தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி சாவகச்சேரி அமைப்பாளர் திரு. ஆர். பரமேஸ்வரன், திரு. கே. கனகராசா, செல்வன் ஆர். குலேதிரர்ராசா, மற்றும் பலர் பேசினார்கள். (க–அ)

## சேக்கிழார் விழா:

# ''பெரியபுராணத்தின் பொருட்சிறப்பை அளவிடமுடியாது'

யாழ்ப்பாணம், வியா

போற்றுவதற்கு அளப்பரிய கருத்துக்களையும் சொல்நயத்தையும் ஒருங்கிணைந்த சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தின் திட்டநுட்பபொருட் சிறப்பை அளவிட முடியாதென அகிலஇலங்கை சேக்கிழார் மன்றம் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடாத்திய சேக்கிழார் விழாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. செ. வைத்திலிங்கம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேருரை நிகழ்த்தும்போது கூறியதாவது:

'பெரியபுராணத்தில் 4286 திருபந்தங்கள் இருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு திருபந்தங்களிலும் அளவிடற்கரிய மிக நுண்ணிய கருத்துக்களும் தத்துவ சிந்தனைகளும் பொதிந்து உள்ளன. ஒரு திருபந்தத்தின் உண்மைக்கருத்தினை ஒரு நாளில் படிப்பதானால் 4000 நாட்களிலே இந்நூலைப்படித்து முடிக்கலாம். ஆனால் சேக்கிழார் பெருமான் மிகக் குறுகிய காலத்தில் இதை அரங்கேற்றியமை பாராட்டுக்குரியது.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனே தெய்வத்துள் வைக்கப்படும்' என்பதைப் போல பெரியபுராணத்தில் சைவத்துக்கும் தமிழுக்கும் அளப்பரிய சேவையாற்றியவர்களின் சிறப்பை எடுத்தாய்கின்றது. நாயன்மார்கள் எல்லாம் தம்மைத் தாழ்த்திக்கொண்டதாலே உயர்ந்தார்கள். தவத்தால் பயன்என்னவென்று சிந்தியாமல் தவத்தின் பின்னர் பயனைக்கண்டார்கள். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்றசைவக் கிரியைகளை முறைப்படி ஒழுகியவர்கள். அவர்கள் சர்வ ஞானிகள். இறைவனை குருவடிவிலும் இலிங்க வடிவிலும், அடியார் வடிவிலும் கண்டு வழிபட்டு முத்தியடைந்தவர்கள். அவர்களை வழிபட்டு அவர்களின் வரலாறுகளை உலகுக்குஅளித்தவர் சேக்கிழார்.'

தமிழ்செல்வி பண்டிதை, சைவப்புலவர், தங்கம்மா அப்பாக்குட்டி பேசும்போது கூறியதாவது:

''சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரியபுராணத்தில் திருமுறைகளின் சிறப்பு திருக்கூட்டத்தின் சிறப்பு, நாயன்மார்களின் சிறப்பையெல்லாம் பெருமைபகர்கின்றது. விருப்பு வெறுப்பு அற்றநிலையிலே, தான்பெற்ற வையகம் என சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றி வந்தனர். உலகத்திலே எத்தனை பிறப்பெடுத்தாலும், பிறரை வாழ்விக்கின்ற பிறப்பே புனிதமானது என்கிற கருத்தைக் கூறுகிறது. வாழ்வாங்கு வாழ்வதற்கும், வாழ வழிகாட்டுவதற்கும் உரிய கருத்துக்கொண்டது பெரியபுராணம். உள்ளத்திலே உண்மையொழியுண்டாயின் உதட்டிலே புன்னகை தவழுவதுபோல இந்துக்கள் நெற்றியிலே திருநீறு தரிப்பதால் அவர்கள் உள்ளமும் புனிதமானது என்ற சிந்தனைக் கருவூலம். எனவே இது உலகப் பெருநூல். இது உலகெலாம் என்று தொடங்கி உலகெலாம் என்று முடிவதிலே இதனையறியலாம்.

திருமுறைஒதலை, யாழ் வேம்படி மகளிர்கல்லூரி மாணவிகளும் மாணவர் அரங்கில் திரு. எம். எஸ். ஸ்ரீதயாளர் கருத்துரை வழங்கினார். பரிசளிப்பு வைபவமும் நடைபெற்றது. [கெ]

# துரையப்பா கொலை வழக்கு:

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிறைச்சாலைச் சுப்பிரிண்டனையும், மூன்றாவது பிரதிவாதிகளாக றிமாண்டில் வைக்கப்பட்ட 7 பேரையும் குறிப்பிட்டிருந்தார்.

பி. கலாபதி, வி. ஏ. கிருபாகரன், எஸ். லோகநாதன், வி. ஸ்ரீதரன், ரி. சந்ததியார் என்ற ஐந்து பேர் மீதும் 'ட்ரயல் அட்பார்' நீதிமன்றத்தில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

க. வி. இன்பம், எஸ். செல்வகுமார் என்ற இருஎதிரிகளும் இவ்வழக்கில் சேர்க்கப்படவில்லை.

எதிரிகள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பிரதான வழக்குத் தொடுநர் (டி. பி. பி.) திரு. ரஞ்சித் அபேசூரியா நீதிபதிகளிடம் தெரிவித்தார். இது பற்றிய கட்டளை ஏதும்கிடைத்துள்ளதா? என நீதிபதிகள் வெலிக்கடை சிறைச்சாலை சுப்பிரிண்டனிடம் கேட்டபோது அவர் கிடைக்கவில்லை என்று பதிலிறுத்தார். எதிரிகளை விடுதலை செய்கையில் நீதிபதிகள் ''உங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கலாகியுள்ளது என டி. பி. பி.யால் தெரிவிக்கப்படுகிறது'' என கூறினர்.

விடுதலையானதும் மேற்படி எதிரிகள் சட்டத்தரணி திரு. மு. சிவசிதம்பரம் வீட்டுக்குச் சென்று அவரைச் சந்தித்தனர்.

### இன விடுதலை முக்கியம்

விடுதலையானவர்களை நமது நிருபர் அணுகியபோது அவர்கள் சொன்னதாவது: ''எமக்கு எதிர்பாராத விடுதலை இது. எமக்கு முக்கியமானது இன விடுதலைதான். சிறைச்சாலையில் நாம் மிகுந்த துன்பப்பட்டபோதிலும் கூட்டணியின்ர் எம் விடுதலைக்காக அயராது பாடுபட்டதை எம்மால் மறக்க முடியவில்லை. தமிழ் மக்கள் இன ஐக்கியம் ஒன்றையே தம் இலசிட்யமாகக் கொள்ள வேண்டும். கூட்டணி உடைந்துவிட இடமளிக்கவே கூடாது. தந்தை செல்வாவின் இறுதி சடங்குகளில் கலந்துகொள்ள முடியாததை நாம் எமது துர்ப்பாக்கியமாகவே கருதுகிறோம்''

### இன்று காலை யாழ், வருவர்

இவர்கள் இன்று மாலை மெயில் ரயிலில் புறப்பட்டு நாளைக் காலை யாழ்ப்பாணம் வரவிருந்தனர்.

இவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று யாழ். உயர் நீதிமன்றத்தில் இவ்வழக்குத் தொடர்பாக ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் ஆஜராவர்.

''ஈழநாடு'' இதழில் வெளியாகும் ''விவாத மேடை'' தம்து கருத்தைக் கவர்ந்த பகுதி என இவர்கள் எமது நிருபரிடம் தெரிவித்தனர்.

(ம-உ)

# ஐ. தே. க.—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

னர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு சில மணித்தியாலத்தின் பின்னர் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டதும் பருத்தித்துறைப்பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். தாக்கியதாகக் கூறப்படும் கோஷ்டியினர் தலைமறைவாகியுள்தாக பொலிஸ்வட்டாரங்கள் தெரிவித்தன.

# பிரயாணிகள் கஷ்டம் நீங்கியது

நெல்லியடி, புதன்

பருத்தித்துறை யாழ்ப்பாணம் கடுகதி பஸ்சேவையில் புதிய பஸ்வண்டிகள் ஈடுபடுத்தப்படுவதை யடுத்து யாழ்ப்பாணம் செல்லும் பிரயாணிகளின் கஷ்டம் ஓரளவு நீங்கியுள்ளது.

பருத்தித்துறை இ.போ.ச.டிப்போவுக்கு ''லேலண்ட்'' நான்கு புதிய பஸ் வண்டிகள் அனுப்பி வைக்கப்பட்டதை யடுத்து, இப்புதிய பஸ் வண்டிகள் யாவும் வல்வெட்டித்துறை நெல்லியடி ஆகிய பாதைகளுக்கு ஊடாக கடுகதி சேவையுல் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

நூற்றுக்கு மேற்பட்ட பிரயாணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய இப்பஸ்வண்டிகள் சேவையிலீடுபடுவதனால் பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரயாணிகளின் கஷ்டம் ஓரளவிற்குக் குறைவடைந்துள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 26 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna; Telegram: Eelanaadu Telephone 389. Registered as Newspaper in Sri Lanka.